பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

# வலம்புரி
# The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 11 வியாழக்கிழமை (28.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 252

# சமாதான முயற்சியில் இருந்து நோர்வேயை விலக்கிவிட விடுதலைப் புலிகள் திட்டமாம்!

## அரச தரப்பு ஊடகம் தகவல்

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளுக்கு நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வேயை அப்பணியில் இருந்து நீக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகள் ஆராய்ந்து வருவதாக அரசதரப்புத் தகவல் ஊடகம் ஒன்று நேற்றிரவு அறிவித்தது.**

**இப் பணிக்கு பின்லாந்து நாட்டை அமர்த்தத் திட்டமிருப்பதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

இலங்கையின் சமாதான முயற்சியில் நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வே அரசின் செயற்பாடுகளினால் அதிருப்தி அடைந்திருக்கும் விடுதலைப் புலிகள் அப் பணியில் இருந்து நோர்வேயை நீக்குவது குறித்து பரிஸில் நடைபெறும் திட்டவரைபு சம்பந்தமான கூட்டத்தில் ஆராய்ந்து வருவதாக அச் செய்தி ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதனுடன் நோர்வேயின் சமாதான முயற்சி தமிழ் மக்கள் பக்கம் சார்பாக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் சார்பாகவே நோர்வே செயற்படுவதாகவும் ஜே.வி.பி. உட்பட தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் கூக்குரல் இடுவதுடன் நோர்வேக்கெதிராகவும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் கடுமையான பிரசாரம் இடம் பெறுவதால் அதனைத் தவிர்க்கும் வகையில் விடுதலைப் புலிகள் நோர்வேயை அகற்றுவது குறித்து ஆலோசித்து வருவதாகவும் அச் செய்தியூடகத் தகவல் தெரிவிக்கின்றது.

இதேவேளை, இலங்கை விவகாரத்துக்குள் இந்தியாவையும் அமெரிக்காவையும் இழுக்கும் இராஜதந்திர நடவடிக்கையில் நோர்வே ஈடுபடுவதால் அதன் தாக்கம் சமாதானத்தைப் பாதித்து விடும் என்பதால் நோர்வேயை நீக்க வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை கூற விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகவும் அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னர் அதனை நடைமுறைக்குக் கொண்டு வர புலிகள் விரும்புவதாகவும்

(10ம் பக்கம் பார்க்க)

# குடும்பப் பெண் மீது சிப்பாய் தகாத சேட்டை

## சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

(திருநெல்வேலி)

குடும்பப் பெண் ஒருவர் மீது பாலியல் சேட்டை புரிய முற்பட்ட இராணுவச் சிப்பாய் பிரஸ்தாபப் பெண் கூக்குரல் இட தப்பியோடி மறைந்து விட்டார்.

இச் சம்பவம் பருத்தித்துறை வியாபாரிமூலையில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

பிரஸ்தாபப் பெண்ணின் கணவர் கடற்தொழில் செய்பவர். அவர் தொழிலுக்குச் சென்ற பின்னர் அவ வீட்டுக்குச் சென்ற இராணுவச்

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர்கள் கடத்தல்

# தமிழ்க் குழு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படுவார்

(மட்டக்களப்பு)

முஸ்லிம்களுக்கு ஆயுதம் விற்பனை செய்ததாகக் கூறப்படும் தமிழ இளைஞர் ஒருவரைத் தாம் கைது செய்ய வேண்டியுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் வாழைச்சேனைக்குச் சென்ற போது காணாமற் போனதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் குறிப்பிட்ட நபரிடம் இருந்து ஏ.கே.47 ஆயுதம் ஒன்றை 45 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்துவிட்டு திரும்பும் வழியிலேயே அவர்கள் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்கக் கூடாது

## பேரியல் அஷ்ரப் அரசிடம் வேண்டுகோள்

(அம்பாறை)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தை அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதை நிறுத்த வேண்டும். அத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணத்தை தனித் தனியாகப் பிரிக்க வேண்டும்.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் அரசாங்கத்திடம் வேண்டுகோள விடுத்துள்ளார்.

அப்பாறையில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தையடுத்து அங்கு இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பேரியல் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; வடக்குக் கிழக்கில் வாழுகின்ற மூவின மக்களுக்குரிய உரிமைகள் சமமாக வழங்கப்படுவதுடன் அதிகாரமும் சமமாக வழங்கப்பட்டாலே நாட்டில் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

வடக்குக் கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கும் இருப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டிய பேரியல் வடக்கு முஸ்லிம் மக்கள் முன்னர் விரட்டியடிக்கப் பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

# வவுனியாவில் பொங்கு தமிழ் செப்ரெம்பர் 24ந் திகதி

(வவுனியா)

வவுனியாவில் அடுத்த மாதம் 15ந் திகதி நடைபெறவிருந்த பொங்கு தமிழ் நிகழ்வு 24ந் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக ஏற்பட்டுள்ள சந்தேகத்தினை அடுத்தே நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை இருதரப்பினருக்கும் பொங்கு தமிழ் தொடர்பாக ஏற்பாட்டாளர்களினால் பூரண விளக்கமளிக்கப்படவுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக வவுனியா போர் நிறுத்தக் கண்

(10ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பொலிஸ் ஆட்சேர்ப்பு தமிழ்-முஸ்லிம் எம்.பிகள் முரண்பாடு!

## பிரதமருடனான நேற்றைய சந்திப்பில் முடிவில்லை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று மாலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினர். எனினும் எந்த ஒரு முடிபும் எட்டப்படாத நிலையில் பேச்சுக்கள் முடிவடைந்தன.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் கிழக்கு மாகாணப் பாதுகாப்புக்கென முஸ்லிம் இளைஞர்களை பொலிஸ் படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாகவுமே ஆராயப்பட்டது.

இதில் முஸ்லிம் இளைஞர்களை பொலிஸ்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு கூட்டமைப்பு எம்.பிக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும் கூட்டமைப்பு எம்.பிக்களின் வேண்டுகோளுக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்ததுடன் கிழக்கு மாகாணப் பாதுகாப்புக்கு பொலிஸ் படைஒன்றை உருவாக்க வேண்டும் எனவும் பிரதமரிடம் வலியுறுத்தினர்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும் முஸ்லிம் எம்.பிக்களும் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் இது குறித்து உடனடியாகத் தீர்மானம் எதுவும் எடுக்க முடியாது எனவும் இது விடயம் குறித்து எதிர்

(10ம் பக்கம் பார்க்க)

# கண்ணி வெடி அகற்றப்பட்டது

(வவுனியா)

வவுனியா குருக்கள் புதுக் குளம் வ்டக்குப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்டுவந்த கண்ணி வெடி அகற்றும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அவ்விடத்தில் இருந்து 416 மிதி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் தற்போது குருக்கள் புதுக்குளம் பகுதியில் மிதி வெடிஅற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இந்திய இராணுவக் குழுவின் இன்னொரு பகுதியினர் சாம்பல் குளப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இ-5,13)

# பாதுகாப்பு அமைச்சைக் கையகப்படுத்துமாறு

# ஜனாதிபதிக்கு பௌத்த பிக்குகள் ஆலோசனை

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளதால் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்க வேண்டும என தேசிய சங்கநாயக்கர் சம்மேளனம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய சங்க நாயக்கா சம்மேளனப்பிரதிநிதிகள், நேற்று முன்தினம் ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்த போதே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். இச்சந்திப்பில் அவசர காலச் சட்டம் நடைமுறையில் இல்லாத காரணத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்ப தற்கு தேவையான சட்ட நட வடிக்கைகளை எடுக்குமாறும் சம்மேளனம் கோரியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. இந்நிலை மேலும் தொடருமானால் நாட்டின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி விடும். என வலிகமஞானரத்ன தேரர் அங்கு கருத்துத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில்,

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுமானால், நாடு மேலும் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டிநேரிடும.

தற்போதைய அரசின் சமாதான நடவடிக்கைகளினால் நாடு இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சிறந்த எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்துவதே பௌத்த பிக்குகளின் தலையாய கடமை.

நாட்டின் இறைமையைப் பாதிக்கக் கூடிய இயக்கங்களின் செயற்பாடுகளைப் புறக்கணிக்க பௌத்த பிக்குகள் ஒன்றிணைய வேண்டுமென்றார். (தி)

## கால்நடை வளர்ப்புக்கு கடனுதவ

(கந்தரோடை)

யாழ்.மாவட்ட சமுர்ததி அதிகார சபை கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக கடனுதவிகளை வழங்கவுள்ளது.

இதன்பிரகாரம் சமுர்த்தி அதிகார சபையின் இவ்வாண்டுக்குரிய செயல் திட்டத்திற்கமைய ஆடு வளர்ப்புக்கென 12ஆயிரத்து 500 ரூபாவும், மாடுவளர்புக்கென 34 ஆயிரம் ரூபாவும், கோழிவளர்ப்புக்கென 35 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.(உ-103)

## மீள இயங்கும் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வந்து சேர்ந்தன

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீள இயங்கும் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக இரண்டாம் கடடமாக ஒரு தொகுதி தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் நிகொட் நிறுவனம் இத்தளபாடங்களை வழங்கியுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைக்கப்படடுள்ள இத்தளபாடங்கள் விரைவில சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-35)

# இந்தியாவின் பங்களிப்பின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

## மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு தொடர்பாக இந்திய அரசுடன் ஐக்கிய தேசிய முனனணி அரசாங்கம் கலந்துரையாடவுள்ளதாக மத்திய பிராந் திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ சந்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில அயல்நாடான இந்தியாவை ஒதுக்கி விட்டு எந்தவொரு தீர்வையும் எடுப்பதற்கு அரசு முயற்சி செய்யமாட்டாது. தற்போது இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

யுத்தம் நீங்கி, கொலைகள், குண்டுவெடிப்புகள் இடம்பெறாத தீர்வொன்றை இலங்கையில் நிலை நாட்டவே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன.

இவ்வாறான தீர்வொன்றை நிலை நாட்ட வேண்டுமனால் அதற்கு இந்தியாவின் பங்களிப்பும் அவசியம என அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## நாடு தன்னிறைவு அடைய மகிந்த வழங்கும் ஆலோசனை

(கொழும்பு)

விவசாய உற்பத்தியில் நாடு தன்னிறைவு காணவேண்டுமானால், விவசாய உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தலவில் புதிதாக அமைக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகை யிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தா.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு, விவசாயத் துறை சார்ந்த உற்பத்திகளுக்கு உத்தேச விலையொன்றை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கும் திட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இலங்கை விவசாயிகளுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டு, விவசாயத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## அலங்கார உற்சவம்

(கந்தரோடை)

கந்தரோடை மடத்தடி ஸ்ரீநாக புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

(இ-103)

## தமிழகத்திலிருந்த ஈழ அகதிகள் பத்துப்பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இந்திய முகாம்களில் அகதிகளாக வாழ்ந்துவந்த 10 பேர் நேற்று முன்தினம் மன்னார் கடல் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இந்திய மீன்பிடி படகுகள்மூலம் மன்னார் கடலினூடாக வந்துகொண்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை மன்னார் மாவட் நீதிவான் என்.எம்.ஏ. அப்துல்லா முன்னிலையில் இவர்களை ஆஜர்படுத்திய போது, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா, நானாட்டான், அடம்பன், முருங்கன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 7 ஆணகளும் 3 பெண்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். (தி)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்கு நாதம்




•• கிழக்கில் தொடரும் பதற்றம் சமாதானத்தைப் பாதிக்கும் ஆபத்து - பவானி
•• முஸ்லிம்களின் பாதுகாப்புக்குத் தனிப் பொலிஸ் படைப் பிரிவா? - கோவையூர் ஜெயா
•• ஞாயிறு தினத்தில் நிறுவனத்தைத் திறக்கக் கோருவது நியாயமில்லை - சிகை அலங்கரிப்பாளர் சங்கம
•• வடக்கு-கிழக்கைப் பிரித்தால் இரத்த ஆறு ஓடும் - விநுரன்
•• ஆலடி மாநாடு
•• வியாசரின் பதில்கள்
செங்கை ஆழியானின்
•• ஈழராஜா எல்லாளன்
(தொடர் நவீனம்)
பொன். கணேசமூர்த்தியின்
•• கடிவாளம் இல்லாத கனவு
(நெடுங்கதை)
இன்னும் பல...




வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில்
உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்கு நாதம்

விலை ரூபா 14.00

யாழ்ப்பாணம்.

## முதல்போட்டியில் "தூள்"கிளப்பிய பாகிஸ்தான் இளம் புயல்

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான கராச்சி தேசிய விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 7விக்கெற்றுக்களால் பங்களாதேஷ் அணியை வெற்றிகொண்டுள்ளது.

இந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணிவீரர் யசீர் அமீட் தனது கன்னிடெஸ்ட் போட்டியில் இரண்டு சதங்களைக் குவித்து புதிதாக சாதனைப்பட்டியலில் இணைந்துள்ளார்.

யசீர்அமீட் தனது முதல் போட்டியில் முதலாம் மற்றும் இரண்டாம் இன்னிங்சில் இரண்டு சதங்களைப் பெற்று இச்சாதனையையும் புரிந்துள்ளார்.

31வருடங்களின் முன்னர் மேற்கிந்திய தீவுகளின்வீரரான லோரன்ஸ் ரோவ் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்சிலும் சதங்களைப்பெற்று இச்சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

இதற்கு அடுத்ததாக யசீர் அமீட்டின் சாதனை31 வருடங்களின் பின்னர் இடம்பெற்று இருக்கின்றது.

அப்போதைய சாதனையாளரான லோரன்ஸ் ரோவ் 1971/72 ல் நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இன்னிங்சில 214 ஓட்டங்களையும்,இரண்டாவது இன்னிங்சில் 100 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். இதனையடுத்து 31 வருடங்களின் பின்னர் யசீர்அமீட் தனது கன்னி டெஸ்ட்போட்டியில் முதலாம் மற்றும் இரண்டாம் இன்னிங்சில் முறையே 170ஓட்டங்களையும் 105ஓட்டங்களையும் பெற்று இச்சாதனைப் பட்டியலில் இணைந்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில், பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 288ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பங்களாதேஷ் அணிக்காக ஹபிபுல்பஸ்ஸர் 71ஓட்டங்களையும்,அலோக்கபாலி 46ஓட்டங்களையும், ஹனான்ஸக்கார் 41ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பங்களாதேஷ்அணி தனது இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் ஹபிபுல்பஸ்ஸர் 108ஓட்டங்களையும், ரஞ்சின் 60ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுததனர்.

இரண்டாம் இன்னிங்சில் பாகிஸ்தான் அணிசார்பில் பந்து வீச்சில் கபீர் அகமட் 48 ஓட்டங்களைவிட்டுக கொடுத்து 5விக்கெற்றுக்களை கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 346ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் யசீர் அமீட் 170ஓட்டங்களையும் யூசுப் ஜூகானா 46ஓட்டங்களையும் தௌபீக்உமர் 38ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 3விக்கெற்றுக்களை இழந்து 217ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன், இப்போட்டியில் 7விக்கெற் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது. இரண்டாவது இன்னிங்சில் யசீர் அமீட் 105ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

## இக்கட்டு நிலையில் இங்கிலாந்து அணி

இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானந்தில் இடம்பெற்ற தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது டெஸ்ட போட்டியில் தென்னாபிரிக்க அணி 191 ஓட்டங்களினால் இங்கிலாந்து அணியினை வெற்றி கொண்டுள்ளது. இதன்மூலம் ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்கா 2:1 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

இப்போட்டியில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அதன் முதல் இன்னிங்சில் சகல விக்கெற்றையும் இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் கரிகிறிஸ்ரன்130 ஓட்டங்களையும்,எம்.ஸ்ரொன்ரகி 59 ஓட்டங்களையும் றுடோல்வ் 55ஓட்டங்களையும் பெற்றதுடன், மங்கையா நிற்னி ஆட்டம் இழங்காமல் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கபீர்அலி 3விக்கெறறுக்களையும்,மாட்டின்விக்னல், அன்ருபிளின்ஒவ் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் முதல் இன்னிங்சிற்காக இங்கிலாந்து அணி சார்பாகக் கைப்பற்றி இருந்தனர்.

தென்னாபிரிக்க அணியின் முதல் இன்னிங்சின் துடுப்பாட்டத்தில் 8வது விக்கெற் இணைப்பாட்டமாக கரிகிரீஸ்ரன் மற்றும் எம்.ஸ்பொன்ரகி 150ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டதுடன் தென்னாபிரிக்க அணிசார்பில் 8வது விக்கெற் இணைப்பாட்டமாக பெற்ற கூடிய ஓட்டம் எண்ணிக்கை என்ற சாதனையைச் சமப்படுத்தியுள்ளனர்.

இதற்கு முன்னர் 2000/2001ற்கான கிரிக்கெற் பருவகாலத்தில் தென்னாபிரிக்க வீரர்களான நீல்மெக்கென்சி மற்றும் சோன்பொலக் ஆகியோரின் இணைப்பாட்டமாக 8 வது விக்கெற்றில் பெற்றுக் கொண்ட 150 ஓட்டங்கள் என்ற சாதனையையே இவர்கள் சமப்படுத்தியுள்ளனர்.

தென்னாபிரிக்க அணி அதன் இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 365ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அன்ருகோல் ஆட்டமிழக்காது 99ஓட்டங்களையும் கரிகிரஸ்ரன் 60 ஓட்டங்களையும் ஜக்கலீஸ் 41 ஓட்டங்களையும் தென்னாபிரிக்க அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ஜேம்ஸ் கேட்லீ 3விக்கெற்றுக்களையும், மாட்டின் விக்னல், கபீர்அலி, அன்ருமிளின்ஒவ் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணி அதன் முதல் இண்ணிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் மாக்புஸசர் 77ஓட்டங்களையும், மாக்கிரஸ்ரஸ்கொத்திக் 59ஓட்டங்களையும் அன்ருபிளிஒவ் 51ஓட்டங்களையும் இங்கிலாந்து அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க வீரர் ஜக்கலீஸ் 38ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3விக்கெற்றுக்களை கைப்பற்றி இருந்தார்.

இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 401 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தினைத் தொடங்கி 209ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த வேளையில், சகல விக்கெற்றுகளையும் இழந்ததுடன் 191ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியிடம் தோற்றுப்போனது.

இதன் மூலம் 5டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்க அணி இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது.இங்கிலாந்து அணி ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. ஒரு ஆட்டம் வெற்றி தோல்வி இன்றியும் நிறைவடைந்துள்ளது. எனவே இறுதிப் போட்டி யில் வெற்றி பெற்றால் மட்டுமே 2:2 என்ற நிலையில் இங்கிலாந்து அணி யினால் இந்த டெஸ்ட் தொடரை சமப்படுத்த முடியும். இல்லா விட்டால் தென்னாபிரிக்க அணி தொடரைக் கைப்பற்றி விடுமென்ற நிலையில் 5வதும் இறுதியுமான ஆட்டம் விறுவிறுப்பாக அமையுமென கிரிகெற் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர். (உ-68)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர்துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் பூங்காவன உற்சவமான இன்று எஸ்.சுகன்யா, ஜீ.தீபன் ஆகியோரின் பாட்டுக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

* * *

நல்லைக்கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இநதுப்பேரவை ஏற்பாட்டில் ஆலய தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் இசைநிகழ்வில் இன்றுமாலை 6.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை வளாகத் தலைவர் சாகித்திய இசைப் பேரரசு நா.வி.மு.நவரெட்ணம் குழுவினரின் "தெய்வீக இசைவிருந்து" இடம்பெறவுள்ளது.

* * *

நல்லைக்கந்தன் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் மேற்குவீதி ஸ்ரீ முத்துவிநாயகர் மண்டபஅரங்கில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் "திருவிளையாடற் புராணம்" தொடரில் இன்று "சிவலிங்க சாட்சி"எனும் விடயம் பற்றி இசைப்பேருரை இடம் பெறவுள்ளது.

* * *

நல்லைக்கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் பூங்காவன இசை நிகழ்ச்சியில் இன்று இரவு 7.30 மணிக்கு நாட்டார் வழக்கியற்கழகத்தினரின் தெய்வீக பக்தி இசைமாலை இடம்பெறவுள்ளது. (உ-18)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை இலந்தைக் கூடல் வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-10)

* * *

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 6.40மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கு முதல்நாளான ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12மணி முதல் இரவு 8மணிவரை சுவாமிக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (உ-10)

## வருடாந்த உற்சவர்

(கல்வயல்)

கைதடி இணுங்கித் தோட்ட கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-36)

## திருவிழா

(மருதங்கேணி)

சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த பெருநாள் கடந்த 21ஆம் திகதி பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் ஆரம்பமானது.

இறுதிநாள் திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-35)

## சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைக்ளுக்கு ஏற்ப அவர்களுக்கான சம்பள முரண்பாட்டை நிவிர்த்தி செய்யும் சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

5 மாதங்களுக்கான 5ஆயிரம் ரூபா கொடுப்பனவில் 3ஆயிரத்து, 300 ரூபாவை இம்மாதமே வழங்குவதற்கான சுற்றறிக்கையே கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டதாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் ஹபீர்ஹாசீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏனைய 3 கோரிக்கைகள் தொடர்பாகவும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தி)

# நல்லூரான் திருவடிக்கு

### (இன்று பூங்காவனத் திருவிழா-26ஆம் நாள்)



### வரமளிப்பாய் நல்லூரானே!

நல்மனத் தோடுனைப் பாட
நல்லூர் முருகா நீவருவாய்!
தொல்லை தருமவுணரை யன்று
தொலைத்தவன் நீயல்லவா!
எல்லோர்க்கும் வாழ்வு தரும்
எங்கள் மறை வேலவனே
இல்லா தோர்க்கு மின்றே
வரமளிப்பாய் நல்லூரானே!

மாருதி ஆவரங்கால்

### பேருலகைக் காத்திடப்பா!

கிள்ளை மொழி பேசிக்
கிறுகிறுக்க வைத் திட்ட
பிள்ளைத் தமிழ்க் குமரா!
பேருலகைக் காத் திடப்பா!
அள்ளிடவே குறை யாத
அறிவுக் களஞ் சியமே!
வெள்ளிமலை மீ தமர்ந்து
வேண்டும் வரந் தருவாய்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### நாடிவருவோர்க்கு நல்வரம் தந்திடுக

நல்லூரிற் கந்தா நாளும்
உன் சிந்தனையால்
நன்னெறி வாழ்வு கொண்டு
நாட்டினர் நலமேவாழ
நல்லருள் புரிவாயென்றே
நாளுமே நம்புகின்றோம்
உன்துணை உறுதியானால்
உலகிலே துன்பமில்லை
என்பதை உணர்ந்தோர்தானே
உனைநாடி வருகின்றார்கள்
உள்ளத்தே தூய்மையோடு
உறுதியாய் நம்பினோர்க்கு
வள்ளலாய்க் காட்சிநல்கி
வரமெலாம் தருவாயன்றோ!

நீர்வைமணி

### உலகம் சிரித்திடும்

கோபுர விளக்கினில் குவலயம் விழித்திடும்
குமரன் வேலினால் உலகம் சிரித்திடும்
காவிடும் தோள்களில் அமைதி குளித்திடும்
கூவிடும் நாதத்தில் நிம்மதி களித்திடும்

இருபாலை புலேந்திரராசா முதலியார்

### சமாதானம் மேலோங்கி நிற்க நன்றே!

பேய்மையுள்ள கற்கமுகி தன்னைக் கொன்றும்
சூரன் சிங்கன் தாரகனைப் போரில் கொன்றும்
தாய்மையொடு தேவர்களின் சிறையை மீட்டும்
வள்ளி தெய்வ யானையுடன் வதுவைகாண
சேய்களென நல்லூரில் திரண்டு நின்று
வணங்கிடுவோம் வாழ்த்திடுவோம் நேர்த்திசெய்தே
தாய்மையுடன் மணங்காண வம்மின் மக்காள்!
சமாதானம் மேலோங்கி நிற்க நன்றே

கவிமணி கந்த முருகேசதாசனார்

# பலஸ்தீன உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிட்டு குழப்பம் விளைவிக்கிறது

## பலஸ்தீன அதிபர் அரபாத் குற்றஞ்சாட்டுகிறார்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தேவையற்ற முறையில் தலையிட்டு குழப்பம் விளைவிப்பதாக பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் குற்றம் சுமத்தியுள்ளார்.

பலஸ்தீனத்திற்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஒருவரை யசீர் அரபாத் நியமித்தமை தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகையினர் தெரிவித்த விமர்சனங்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே யசீர் அரபாத் இவ்வாறு கூறியுள்ளார்.

பலஸ்தீனத்தின் பலம்வாய்ந்த ஒரு நபராகக் கருதப்படுகின்ற ஜிப்ரில் அல்ரஜூ பலஸ்தீனத்தின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதால் பலஸ்தீனப் பாதுகாப்புப்படையினரை ஒன்றிணைத்து அமெரிக்காவின் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பிரதமர் முகமட் அப்பாஸின் முயற்சிகள் பாதிக்கப்படும் என அமெரிக்கா முன்னர் கருத்து வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட யசீர் அரபாத்,

பலஸ்தீனத்தின் உள்விவகாரங்களில் எந்தவொரு வெளிச் சக்தியும் தலையிடுவதைத் தான் அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்ததுடன், இஸ்ரேலின் உள்விவகாரங்களில் இவ்வாறு யாரும் தலையிட முடியுமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்க அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துள்ள பலஸ்தீனப் பிரதமர், அமெரிக்காவின் கோரிக்கைக்கு அமைவாக பலஸ்தீனப் போராளிகளின் ஆயுதங்களைக் களைய முயற்சிக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பிலேயே படையினரை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர யசீர் அரபாத் முயற்சி செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(பி-2)

# மும்பை குண்டுவெடிப்புக்கு பெண் தீவிரவாதி காரணம்

## விசாரணைகளின் பின் தெரிவிப்பு

(சென்னை)

மும்பையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இரட்டைக் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கும் லக்ஷரி ஈ தொய்பா அமைப்பிலுள்ள பெண் தீவிர வாதி ஒருவருக்குமிடையில் தொடர்பு இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

அறுபதிற்கும் மேற்பட்டவர்களைப் பலிகொண்ட இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை தீவிர விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸாரே இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து இப்பெண் தீவிரவாதியையும், குறிப்பிட்ட இடத்தில் குண்டுகளை வைப்பதற்கு உதவி புரிந்ததாகத் தெரிவிக்கப்படும் ஒரு ஆண் தீவிரவாதியையும் மும்பைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதனிடையே, சம்பவம் இடம் பெற்ற இடத்தை துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது 1993ல் இடம் பெற்ற மும்பைக் குண்டுவெடிப்புக்குக் காரணமான தாவுத் இப்ரஹிம் உள்ளிட்டோரை பாகிஸ்தான் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி கோரிக்கை விடுத்திருந்தார்.

(பி-2)

# ஜம்மு-காஷ்மீரில் இடம்பெற்ற தாக்குதலில் படைவீரரொருவர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இந்திய வீரரொருவர் கொல்லப்பட்டிருப்பதுடன், பொலிஸார் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது ஆயுதபாணிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலிலேயே இராணுவவீரர் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட ஜாஈஷி முகமட் என்ற அமைப்பு இத்தாக்குதல் சம்பவத்திற்கு உரிமை கோரியுள்ளதுடன், பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் கூட்டி இதனைத் தெரிவித் தும் உள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில் இடம் பெறவிருக்கும் முக்கிய கூட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்காக பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானியும் இன்று விஜயம் செய்யவுள்ள நிலையிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

காஷ்மீரில் அமைதி ஏற்படுத்தப்பட்டுவிட்டதாக வெளி உலகிற்குக் காட்டுவதற்காக வாஜ்பாய் அரசின் முக்கிய அமைச்சர்களுடன் இந்த விஜயம் இடம்பெறவிருந்த நிலையில் இத்தகைய தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


(பி-2)

# ஈராக்கில் கொல்லப்பட்ட படையினர் பற்றிய 'பென்ரகன்' விபரம்

(வாஷிங்டன்)

ஈராக்கில் இதுவரை கொல்லப்பட்ட அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படையினரின் எண்ணிக்கை தொடர்பான புதிய விபரங்களை பென்ரகன் வெளியிட்டுள்ளது.

ஈராக்கில் பிரதான யுத்தம் முடிவுற்று விட்டதாக மே மாதம் முதலாம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் அறிவித்த பின்னர், கடந்த 6 வாரங்களில் ஏற்பட்ட மோதல்களில் அதிகளவு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாக அந்த விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொல்லப்பட்ட படையினரில் மோதல்களில் கொல்லப்பட்டவர்களை விட விபத்துக்களிலும், பன்னாட்டுத் துருப்புக்களுடனும் ஏற்பட்ட தவறுதலான மோதல்களில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கையும் கணிசமாக காணப்படுகின்றது.

மோதல்களில் கொல்லப்பட்ட படையினரைப் பொறுத்தவரை, போர் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையில் 178 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக பென்ரகன் அறிக்கை கூறுகிறது.

இவர்களில் 62 பேர் மே மாதம் 1ஆம் திகதிக்குப் பின்னர் ...டுள்ளனர்.

இவர்களில் 10 பேர் மே மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவை தவிர பன்னாட்டுப் படைகளைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறான மோதல்களில் கொல்லப்பட்டுள்ளார்.

மோதல்கள் தவிர ஏனைய சம்பவங்களில் 99 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் 78 பேர் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின் னர் கொல்லப்பட்டவர்களாவர். இவ்வாறே பிரித்தானியத் துருப்புக்களிலும் 30 பேர் வேறு சம்பவங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களிலும் 5 பேர் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களாவர்.

இவை தவிர ஈராக்கியப் படையினர் 2 ஆயிரத்து 320 பேரும், சுமார் 6 ஆயிரத்து 113 பேர் முதல் 7 ஆயிரத்து 830 பேர் வரையிலான பொதுமக்களும் இந்த

# வடகொரிய-அமெரிக்கப் பிரதிநிதிகள்

கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட ஜாஈஷி முகமட் என்ற அமைப்பு இத்தாக்குதல் சம்பவத்திற்கு உரிமை கோரியுள்ளதுடன், பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் கூட்டி இதனைத் தெரிவித் தும் [illegible]க் காட்டுவதற்காக வாஜ்பாய் அரசின் முக்கிய அமைச்சர்களுடன் இந்த விஜயம் இடம்பெறவிருந்த நிலையில் இத்தகைய தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(பி-2)

உலக தரிசனம்

... மோதல்களில் கொல்லப்பட்டவர்களை விட விபத்துக்களிலும், பன்னாட்டுத் துருப்புக்களுடனும் ஏற்பட்ட தவறுதலான மோதல்களில் கொல்லப்பட்ட படையின ரது எண்ணிக்கையும் கணிசமாக காணப்படுகின்றது.

மோதல்களில் கொல்லப்பட்ட படையினரைப் பொறுத்தவரை, போர் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையில் 178 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக பென்ரகன் அறிக்கை கூறுகிறது.

இவர்களில் 62 பேர் மே மாதம் 1ஆம் திகதிக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களாவர்.

பிரித்தானியத் துருப்புக்கள் 18 பேர் மோதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். ... படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் 78 பேர் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களாவர். இவ்வாறே பிரித்தானியத் துருப்புக்களிலும் 30 பேர் வேறு சம்பவங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களிலும் 5 பேர் மே மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களாவர்.

இவை தவிர ஈராக்கியப் படையினர் 2 ஆயிரத்து 320 பேரும், சுமார் 6 ஆயிரத்து 113 பேர் முதல் 7 ஆயிரத்து 830 பேர் வரையிலான பொதுமக்களும் இந்த மோதல்களில் கொல்லப் பட்டதாக ரொய்ட்டர் செய்தி கூறுகின்றது.

(பி-2)

# வடகொரிய-அமெரிக்கப் பிரதிநிதிகள் அருகருகே அமர்ந்து பேச்சு நடத்தினர்

(பெய்ஜிங்)

வடகொரியாவின் அணுவாயுத சர்ச்சை தொடர்பாக ஆராய்வதற்காக சீனாவில் கூடியுள்ள ஆறு நாடுகளின் பிரதிநிதிகள், நேற்று முன்தினம் உத்தியோகப் பற்றற்ற முறையில் சந்தித்து ஆரம்பப் பேச்சுக்களை மேற்கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட வடகொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளோடு சீனா, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வடகொரிய அணுவாயுத பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் இப்பேச்சுக்களை சீனா ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவுடன் மட்டுமே நேரடியாகப் பேச முடியும் என தெரிவித்துவந்த வடகொரியா, [illegible] சீனாவின் ஏற்பாட்டின் பேரில் ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சுக்களில் இது குறித்து ஆராய சம்மதம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் நேற்று முன்தினம் இடம்பெற்ற உத்தியோகப்பற்றற்ற முறையிலான ஆரம்பப் பேச்சுக்களில் வடகொரியப் பிரதிநிதிகளும், அமெரிக்கப் பிரதிநிதிகளும் அருகருகே அமர்ந்திருந்தார்கள் என ரொய்ட்டர் செய்தி [illegible] தெரிவிக்கின்றது.

(பி-2)

# ஹெலிகள் இரண்டு மோதியதில் 6 ரஷ்யப் படைவீரர்கள் பலி

(மொஸ்கோ)

ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டர்கள் இரண்டு நடுவானில் மோதிக் கொண்டதில் [illegible] இராணுவவீரர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயங்களுடன் தப்பித்துள்ளார்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு எம்.ஐ-24 ரக ஹெலிகொப்டர்களும் தரையிறங்க முயற்சித்த சமயமே இந்த விபத்து நேர்ந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்துத் தொடர்பாக கருத்து வெளியிட்ட ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஷெர்ஜிஇவானோ, இது விமான ஓட்டிகளின் கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்து என கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவார காலத்திற் குள் ரஷ்யாவில் இடம்பெற்ற இரண்டாவது ஹெலிகொப்டர் விபத்து இது என்பதும், இவ்விரண்டு விபத்துக்களிலும் 20 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(பி-2)

# தமிழ்நாடு மீனவர் 96 பேரை ஆந்திரா மீனவர் கடத்தினர்

(சென்னை)

சென்னை காசிமேட்டைச் சேர்ந்த 96 கடற்றொழிலாளர்களை ஆந்திரமாநில கடற்றொழிலாளர்கள் கடத்திச் சென்று தடுத்து வைத்துள்ளார்கள்.

கடந்த 20 ஆம் திகதி 30 பேரும், 22ஆம் திகதி 66 பேரும் பிடித்துவைக்கப்பட்டுள்ள நிலையில், பணம் கொடுத்தால் அவர்களை விடுதலை செய்வதாக ஆந்திரா மாநில கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தமிழக கடற்றொழிலாளர்களை அடிக்கடி இவ்வாறு கடத்திச் செல்லும் ஆந்திரா மாநில கடற்றொழிலாளர்கள் அவர்களிடம் பணம் பெற்று வருவதுடன், தாக்குதல்களையும் மேற்கொண்டு வருவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(பி-9)

# உ.பி.முதல்வர் மாயாவதி ராஜினாமா

(சென்னை)

உத்தரப்பிரதேச முதலமைச்சர் செல்வி மாயாவதி தனது பதவியை நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்துள்ளதையடுத்து அங்கு ஆட்சி அமைக்க சமாஜிவாதிக்கட்சித் தலைவர் முனாய் சிங் யாதவ் உரிமை கோரியுள்ளார்.

நேற்று லக்னோவின் மாநில ஆளுநர் விஷ்ணுகாந் சாஸ்திரியைச் சந்தித்து இதற்கான கடிதம் ஒன்றை அவர் வழங்கியுள்ளார்.

சட்டப் பேரவையில் தனிப் பெருங்கட்சியாக இருக்கும் தமது கட்சி ஆட்சி அமைக்க முடியுமென முனாய்சிங் யாதவ் கூறியுள்ளார்.

மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமைக்க வேண்டும் என்றும் மாயாவதி ஆளுநரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

உத்தரப் பிரதேச அரசு நிலைமை குறித்து பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி மன்றக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் கூடி விவாதித்தது.

(பி-2)

# 20 தீவிரவாதிகளையும் ஒப்படைக்க வேண்டும்

## பாக்.இடம் அத்வானி கோரிக்கை

(மும்பை)

1993ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய 20 குற்றவாளிகளை பாகிஸ்தான் உடனடியாக இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்திய துணைப்பிரதமர் அத்வானி கோரிக்கை விடுத்துள்ளார்.

திங்கட்கிழமையன்று மும்பையில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்பைப் பார்வையிடச் சென்ற அவர், விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

1993ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 250ற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை, எதிர்க்கட்சி யின் தலைவி சோனியா காந்தி யும் குண்டுவெடித்த இடத்தை செவ்வாய்க்கிழமையன்று தனது கட்சிகளுடன் சென்று பார்வையிட்டுள்ளார்.

திங்கட்கிழமையன்று இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத் திற்கு சீனா, பிரித்தானியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரும் கண்டனம் தெரிவித்திருக்கின்றார்கள்.(பி-9)

# நகரத் தலைவர் வீதியில் வைத்துச் சுட்டுக்கொலை

(டாக்கா)

பங்களாதேஷின் குல்னா நகரின் எதிர்க்கட்சியான அவாமிலீக்கைச் சேர்ந்த நகரத் தலைவர் மொன்சு குல் இமாம் முச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருக்கையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டியின் சாரதியும் சுடப்பட்டு பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்திருப்ப துடன், மற்றொருவரும் இந்தச் சம்பவத்திலே காயமடைந்துள்ளார்.

இந்தக் கொலையைத் தொடர்ந்து அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர்களுக்கும், ஆளும் கட்சியான பங்களாதேஷ் தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்குமிடையில் கலவரங்கள் மூண்டுள்ளன. (பி-9)

# யுத்தத்தின் கொடுமைகளை எமது தலைவரும்,போராளிகளும் உணர்ந்துள்ளனர்

## திருப்பெருந்துறையில் கௌசல்யன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரும்பாத சில தீய சக்திகள் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன. அதனைத்தடுக்க அனைத்து இன மக்களும் விழிப்புடன் செயற்படவேண்டும். ஆயுத யுத்தம் அழிவையே தரும். யுத்தம் இன்றி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவே தற்போது சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஏ.கௌசல்யன் மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் கடந்த திங்கட்கிழமை நடை பெற்ற மக்கள் எழுச்சிச் சங்க இறுதி நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், யுத்தத்தின் கொடுமைகளை எமது தலைவரும் போராளிகளும் உணர்ந்ததன் விளைவாகவே யுத்தம் இன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் எமது உரிமைகளைப் பெற முயற்சித்து வருகிறோம்.

இந்நிலையில் சில அரசியல்வாதிகள் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது கண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

# ஜே.வி. பியுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் இல்லை

## பொ.ஐ.மு.பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே ஏற்படுத்தப்படவுள்ள கூட்டமைப்புத் தொடர்பாக வருங்காலத்தில் எதுவித பேச்சுவார்த்தையும் நடைபெற மாட்டாது என் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்தார்.

இக்கூட்டமைப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே ஏற்படுத்தப்படவுள்ளதால், அது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்த பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு அவசியம் இல்லை என அக்கட்சியில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனினும்,இக்கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்க உத்தேச கூட்டமைப் புத் தொடர்பாக அடிக்கடி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டம் வெளியிடப்பட்டது

## அமைச்சர் பீரிஸ் தகவல்



(கொழும்பு)

அரசாங்கம் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளதாக அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொனன்டு உரையாற்றுகையிலேயே மேற்படி தகவலைப் பீரிஸ் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து கூறுகையில், 18 மாதங்களுக்கான நிவாரணத் திட்டமாக இது பெயரிடப்பட்டுள்ளதுடன், கிராமிய அபிவிருத்திக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி முழுத்திட்டத்திற்காகவும் ஆயிரத்து 740 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

கடந்த 10 மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, அரசின் சிறந்த பொருளாதார முகாமைத்துவம் காரணமாகவே இதனை அமுல் படுத்தக் கூடிய சிறந்த சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

கிராமிய பிரதேசங்களுக்கான மின் விநியோகம்,வீதி அபிவிருத்தி என்பன இத்திட்டத்தில் அடக்கப்பட்டிருக்கிறது. அதன்படி மேலும் 16இலட்ச குடும்பங்களுக்கு மின் விநியோகம் கிடைக்கவுள்ளது.

இத்திட்டத்திற்கு சீனா, குவைத், சுவீடன்போன்ற நாடுகளும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது என்றார். (உ-10)

## சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்போர்க்கு

# பொது மன்னிப்பு வழங்கியும் பயனேதும் ஏற்படவில்லை

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க அரசாங்கம் வழங்கியிருந்த பொது மன்னிப்புக் காலத்தில் எந்த விதப்பயனும் கிட்டவில்லை என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இப் பொது மன்னிப்புக் காலத்தில் எந்த வித ஆயுதங்களும் ஒப்படைக்கப்படவில்லை. நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதில் எதிர் நோக்கும் பிரதான சிக்கல் சட்ட விரோத ஆயுதங்களே .

இராணுவத்தில் இருந்து தப்பிச்செனறோர், நாடு முழுவதிலும் மறைந்திருக்கின்றனர். இவர்களிடம் துப்பாக்கிகள் உட்பட பல் வேறு வெடி பொருட்கள் இருக்கின்றன.

கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றவர்களே கூடுதலாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுடன் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார் (தி)

# ஆட்சேர்ப்பு தேர்வு மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகட்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த மேற்படி போட்டிப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் செப்ரெம்பர் மாதம் 14ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துவதுடன்,ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பட்ட அனுமதி அட்டையே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையுமபரீட்சை நேரங் களில் மாற்றம் எதுவும் இல்லை எனபதையும் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச சேவை அணைக்குழுவின் செயலாளர் வே.பொ. பாலசிங்கம் அறியத்தந்துள்ளார். (உ)

# கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று மட்டு செல்கிறார்

(கொழும்பு)

இலங்கை யுத்தக் கண்காணிப்பு குழுத்தலைவர் ட்ரைவ் கெவ்ரெலவசன் இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் இனந்தொியாதவர்களால் சுட்டுக்கொல்லப்படுவது மற்றும் கடத்திச் செல்லப்படுவது தொடர்பாக அக்கட்சிகளின் உறுப்பினர்களுடன் ஆராய்வதற்காகவே இன்று அங்கு செல்லவுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல். எவ் (வரதர் அணி), புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகளின் மாவட்ட அமைப்பாளர்களை இவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியானாறுப் பகுதிக்கு விஜயம் செய்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி றமேஸையும் சந்தித்துப்பேசவுள்ளதுடன்,

மாவட்ட அரச அதிகாரிகளையும் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார். (தி)

## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

# வெற்றிடங்களை நிரப்ப இருகட்சிகளும் இணைய வேண்டும்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைய வேண்டுமென அரசியல் யாப்புத் தலைவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள் ளார்.

தற்போதைய அரசியல் யாப்பு சட்டத் திருத்தங்களுக்கு அமைய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரை எதுவித விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப் படவில்லை.

இதனால், தற்போது உள்ள சட்ட மூலத்தில் திருத்தத்தை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு அரசாங்கமும், எதிர்க் கட்சியும் ஒன்றிணைந்து திருத்ங்களை மேற்கொள்ளவேண்டும்.

சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் சூழ்நிலையிலேயே வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப முடியும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடத்தை அடுத்த இரு வாரங்களுக்குள் நிரப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் அவர் மேலுமதெரிவித்துள்ளார். (தி)

# எல்லைக்கிராம மக்கள் நிலையை அறிய புலிகள் குழு நேரில் விஜயம்

(ஓமந்தை)

வவுனியா வடக்கு ஓமந்தையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள எல்லைக் கிராமங்களான சேமமடு, பன்றிக் கெய்த குளம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியேறிய மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில், அவர்களின் நிலையை நேரில் கண்டறிவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தலைமையிலான குழுவொன்று சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

எழிலன் தலைமையிலான மேற்படி குழுவில் மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருகுமரன், பொருண்மிய மேம்பாட்டுத் துறைப்பொறுப்பாளர் மதன்ராஜ், வவுனியா மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் நம்பி மற்றும் வவுனியா வடக்கு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீபதமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப பொறுப்பாளர் தங்கன் உட்பட மற்றும பலரும் அங்கம் வகிக்கின்றனர்.

சுமார் 2ஆயிரம் குடும்பங்கள் வரை மீளக்குடியேறியுள்ள மேற்படி பிரதேசங்களில் உள்ள மக்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்டு, அவர்களின் வாழ்வை மேம் படுத்தும் வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைள் குறித்து இவர்கள்தீர ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)



நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி விளையாட்டு விழாவில் பரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி .கிழக்குப் பிரதேச செயலர் க. வெங்கடாசலம், மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் விநோத உடைப் போட்டியில் பங்கேற்ற சிறுவர்களையும் படங்களில் காணலாம்


நல்லூர்

ஸ்ரீ முத்து விநாயகப் பிள்ளையார் தேவஸ்தானம்





ஸ்வஸ்ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் (29.8.2003) வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரமும் துதியைத்திதியும் சித்த யோகமும் சிங்க லக்கினமும்கூடிய 6.5- 7.35 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நல்லூர் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் பரிவாரங்களான மூஷிகம், பலிபீடம், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சந்நிதானங்களில் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

கிரிஜா விபரம்

28.8.2003 வியாழக்கிழமை — காலை 9.மணிக்கு கர்மாரம்பம், அனுந்தை, வாஸ்துசாந்தி, கடஸ் தாபனம், கலாகர்ஷணம், ஸ்தூலஸ் தாபனம், தீபஸ்தானம், பிம்பஸ்தானம், அஷ்ட பந்தனம்
மாலை 4.00 -6.00 மணி வரை தைலாப்பியம் (பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்)

29.08.2003 வெள்ளிக்கிழமை — காலை 6.05 -7.35 வரையுள்ள சிங்கலக்ன சுபமூகூர்த்தத்தில் மூஷிகம், பலிபீடம், வைரவர் முதலான பரிவார மூர்த்திகளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

மேற்படி கும்பாபிஷேக கிரியைகளுக்கு வேண்டிய பால், இளநீர், நெய், புஷ்பங்கள் முதலானவற்றை இயன்றவரை கொண்டுவந்து கொடுத்து இறைவன் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றேன்.

ச.சோமசுந்தரசர்மா,
தேவஸ்தானம் .

(C-6587)

# மரணத்திற்கான தருணத்தை வலிந்து ஏற்கும் கருணைக் கொலையை அனுமதிக்கலாமா?

சமீபத்தில் 'நெதர்லாந்து' நாட்டில் மருத்துவர்களே 'கருணைக் கொலை'க்கு உதவி செய்ய சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். இறக்க விரும்புவோர் மருத்துவர்களை அணுகி சட்டப்படி மரணம் அடையலாம். எப்படிச் செய்ய வேண்டும் என்று சட்டத்தில் சரத்துக்கள் விலாவாரியாக விளக்கப்பட்டிருக்கின்றது. நெதர்லாந்து அரசு மக்கள்சபையில் அறுதிப் பெரும்பான்மை வாக்கு (Vote) எடுப்பில் 90 சதவீதம் மேல் இந்தக் கருணைக் கொலைக்கு ஆதரவு பெற்று சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுவிட்டது. இதற்கு (Assisted Death) 'உதவி செய்யப்பட்ட மரணம்'என்று கூறப்படுகின்றது.

✦ மனிதனுக்கு ஆரோக்கியமாக வாழ உரிமை உண்டு.

✦ எப்பேர்ப்பட்ட கொடியவனாக இருந்தாலும் அவனுக்கும் ஏதேனும் ஒரு தண்டனை கொடுத்து சமூகம் அவனை வாழ வைக்கிறது.

ஏற்க டாக்டர்களும், மருத்துவ சங்கங்களும் மறுத்து விட்டன.

அவுஸ்திரேலியாவில் 1996ஆம் ஆண்டு (வடக்குப் பகுதியில்) கருணைக்கொலை செய்ய அனுமதிக்கலாம் என்ற சட்டம் இயற்றப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் மக்கள் எதிர்ப்பால் வாபஸ் பெறப்பட்டுவிட்டது! ஆதி வாசிகளும், அனைத்து மதத்தினரும் இதனை எதிர்த்தனர்.

ஆனால் மேற்கத்திய நாடுகளில் ஏதோ ஒரு வடிவத்தில் கருணைக்கொலை ஆதரிக்கப்பட்டு வருகின்றது என்றே தோன்றுகின்றது.

**கருணைக் கொலை என்றால் என்ன?**

கருணைக் கொலை (Euthanesia) என்பது மனிதனுக்கு தீராத நோய்தாக்கி, அனைத்து சிகிச்சைகள் செய்தும் குணப்படுத்த முடியாமல் பரிதாபமாக மிகவும் கஷ்டப்பட்டு, மீளவும் முடியாமல், சாகவும் முடியாமல் மருத்துவ சிகிச்சையாலும் பலனில்லாமல் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்

**எந்த மருத்துவத்துறையிலும் வாழ்வதற்குத்தான் மருத்துவ உதவி செய்ய வசதி/அனுமதியளிக்கப்பட்டிருக் கிறது. டாக்டர்களுக்கும் உயிர் காப்பாற்றுவதற்குத்தான் உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது.**

✦ இன்று பல நாடுகளில் மரண தண்டனையும் நீக்கப்பட்டு விட்டது.

✦ நவீன விஞ்ஞான வளர்ச்சியில் மனிதன் வாழும் வயது அதிகரித்திருக்கிறது.

✦ மரணத்தைத் தள்ளிப்போட வசதி உள்ளது. உதாரணமாக இதயம், சிறுநீரகம் போன்ற பாகங்கள் பழுதுபட்டால் மரணம் நிச்சயம். ஆனால் சமீப காலங்களில் இவர்களையும் செயற்கையாக்க கருவிகள் மூலம் உயிர் தக்கவைத்து, தகுந்த உதிரிப் பாகங்கள் கிடைத்தவுடன், பல மாதங்கள் கடந்தாலும் சிறுநீர கம், இருதயம் போன்ற நுட்ப நுணுக்கமான உறுப்புக்களையும் மாற்று அறுவைச்சிகிச்சை செய்து பல்லாண்டுகாலம் மீண்டும் நல்ல மறுவாழ்வு வாழ வழி பெருகிவிட்டது.

✦ பொருளாதார மேம்பாட்டினால் மக்கள் வாழ்க்கைத் தரமும் முன்னேறிவிட்டது. பணம் செலவு செய்து சிகிச்சை செய்துகொள்ள முடியும்.

மகப்பேறு மருத்துவத்திலும் செயற்கைப் பிரசவம் என்று குழந்தை பிறக்க வேண்டிய நேரத்தை- நல்ல நாள், நட்சத்திரம் என்று ஆரூடம் பார்த்து நல்ல நேரத்தில் கர்ப்பிணித் தாய்மார் கள் மகப்பேறு மருத்துவரிடம் சென்று வற்புறுத்தி செயற்கையாக அறுவைச் சிகிச்சை (Caeasarian operation) செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள்.

ஸ்கானிங் றிப்போர்ட்டில் உடல் ஊனமுற்ற குழந்தை உருவாகியிருப்பது தெரியவந்தால் கருச்சிதைவு செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றது.

இவைகளை 'அனுமதிக்கப் பட்ட/ உதவி செய்யப்பட்ட பிறப்பு' (Assisted Birth) என்று கூறலாமா?

நவீன மரபணு மருத்துவம் பெரும் புரட்சியை உண்டாக்கப் போகிறது! ஆனால் உலகெங்கும் 'கருணைக் கொலை' (Assisted Death) எனப்படும் மருத்துவர் உதவியுடன் வாழ்வை முடித்துக் கொண்டு மரணமடைவது பற்றி பத்திரிகைகளிலும், தொலைக் காட்சிகளிலும் இப்போது அலசப் படுகின்றது. இதனை ஆதரித்து நெதர்லாந்தில் சட்டம் அனுமதி அளித்துவிட்டது. அகில உலகிலும் இந்த நெதர்லாந்து நாடு தான் கருணைக் கொலைக்குச் சட்டப்படி அனுமதி அளித்த முதல் நாடாகும். ஆனால் அந்த நாட்டிலும் இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தோன்றியிருக்கிறது.

சில நாடுகளில் மரண தண்டனை பெற்ற கைதிகளுக்கு டாக்டர்கள் உதவி மூலம் மரண ஊசி அளிக்கலாம் என்ற யோசனையை

போது, அவர் மேலும் கஷ்டப்படாமல் இருக்க சட்ட அனுமதியுடன், நோயாளி சுற்றத்தோர் மற்றும் அரசு அனுமதி பெற்ற பதிவாளர், காவல் அதிகாரிகள் முன்னிலையில், அனுமதிக்கப்பட்ட மரண ஊசி மூலம் அங்கீகாரம் பெற்ற மருத்துவர், கஷ்டமில்லாமல் மரணம் ஏற்படுத்துவது தான் எல்லோரும் அறிந்தது. இதற்கு (Active Euthanesia) அங்கீகாரம் பெற்றுத் தெரிந்து செய்யும் கருணைக் கொலை என்று பெயர்.

ஆனால் அங்கீகரிக்கப்படாத மாற்றுவித கருணைக் கொலைகளும் நடைமுறையில் மருத்துவர் உதவியுடன் செய்யப்படுகின்றன என்று ஏராளமான பத்திரிகைக் குறிப்புகள் கூறுகின்றன. இதற்கு Passive Euthanesia என்று பெயர். அதாவது உயிர் காக்கும் சாதனங்களான.

1. ஒட்சிசன் (பிராண வாயு)
2. குளுக்கோஸ் (செலைன்) டிரிப்
3. மற்றும் உயிர் காக்கும் மருந்துகள்
4. இரத்ததான டிரிப்

முதலிய சிகிச்சை முறைகளைக் கொடுக்காமல் இருப்பது அல்லது நிறுத்திவிடுவது என்பது ஒருசில தீர்க்க முடியாத நோயாளிகளுக்கு சில இடங்களில் செய்யப்படுகின்றன என்று பத்திரிகை அறிக்கைகள் கூறுகின்றன.

மற்றும் சில நோயாளிகளுக்கு வலி நிவாரண மருந்துகள் அளவுக்கு மீறிக் கொடுக்கப்பட்டு, நோய் குணமாகாமல் அதன் பக்கவிளைவுகளால் மரணமடைகின்றனர். இந்த வலி நிவாரண மருந்துகள் நோயாளிகளுக்குக் கட்டாயம் தேவை. அவர்களுக்குத் தேவைப்பட்ட நிவாரணமும் கிடைக்கிறது. ஆனால் மருந்தின் உக்கிரம் மரணத்தை விளைவிக்கிறது. இங்கு இரண்டு விதத்திலும் மரணம் ஏற்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு, மருத்துவர்கள் இந்த முறைகளில் மரணமடைய உதவுகிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்புக் கூறுகின்றது.

இயற்கையாக மனித சமுதாயத்தில் இதுநாள்வரை கருணைக் கொலை எப்படிக் கையாளப்பட்டிருக்கின்றது என்று பார்ப்போம்.

இன்றும் சில மதங்களின் உட்பிரிவுகளில் டாக்டர்களும் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்வதில்லை. எல்லாம் ஆண்டவர் ஆசீர்வாதம் என்று வலியை அன்புடன் ஏற்றுக் கொண்டு மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறாமல் ஆண்டவனை ஸ்தோத்திரம் செய்து குணமடைய பிரார்த்திக்கிறார்கள். சிலர் நோயின் கொடூரத்தால் இறப்பதும் உண்டு. மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றனர். இது கருணைக் கொலையாகுமா? இவர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றிருந் தால் பிழைத்திருப்பார்கள். மதக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு இவர்கள் வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்துக்களில் பலர் காசி, திருவரங்கம் போன்ற புனித ஸ்தலங்களுக்குச் சென்று தங்கள் அந்திம வாழ்க்கையை முதிய வயதில் இயற்கையாக மரணமடையும் வரை இருந்து முடித்துக்கொள்வதை விரும்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

ஜப்பானில் 'ஹராகிரி' என்னும் தற்கொலை செய்துகொண்டு மரணமடைவதைப் பெருமையாகக் கருதுகின்றனர்.

நிதிப்பற்றாக்குறை உள்ளவர்கள் வசதியின்மை காரணமாக தகுந்த சிகிச்சை பெற முடியாமல் மரணமடைகின்றனர். இது ஒரு சமுதாயக் கொலை. எது நேர்ந்தாலும் ஆண்டவன் செயல் என்று விட்டு விடுகின்றனர் பலர்.

பூதான இயக்கத் தலைவர் ஆசார்ய விநோபா பாவே, தனது தள்ளாத முதிய வயதில் உடல் நலம் பாதிக்கப்பட்ட போது மருத்துவ சிகிச்சை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க பொது நல விரும்பிகள் நீதிமன்றத்தை அணுகினர். ஆனால் விநோபா பாவே அவர்கள். இயற்கை தரும் பரிசையே ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறி மருத்துவசிகிச்சை செய்துகொள்ள மறுத்துவிட்டார்.

மகாத்மா காந்தி அவர்கள் பிராணிகள் மூலம் பெறப்பட்ட மருந்து தன் உறவினர்களுக்கு செலுத்த வேண்டாம் என்று கூறி மறுத்துவிட்டார்.

ஆபிரிக்காவில் சமீபத்தில் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையுள்ள மக்கள், தங்கள் தலைவர் கூறிய அருள்வாக்குப்படி தங்கள் கோயிலுக்குள் ஆயிரக்கணக்கில் சென்று கதவு, ஜன்னல்களை மூடிக் கொண்டு விஷ வாயு பெற்றுக் கொண்டு அனைவரும் இறந்து பல நாட்களுக்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்டது. சாட்சிகளும்

**அமெரிக்காவில் 'ஓரிகான்' என்னும் நகரத்தில் கருணைக கொலை செய்ய ஒருசில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.**

இல்லை. ஒரு குறிப்பிட்ட மத குருவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவர் கட்டளையின் பேரில் ஆயிரக்கணக்கானோர் ஒரே நாளில் இறந்து மடிந்த செய்தி அகில உலகத்தையும் உலுக்கி விட்டது. இன்றுவரை அதன் காரணம் வெளிவரவில்லை. கண்டுபிடிக்கவுமில்லை.

**பெண் சிசுக்கொலை**

இது கருணைக் கொலை அல்ல. நாகரிகமுள்ள, கடவுள் நம்பிக்கை கொண்ட கலாசாரம், பண்பாடு, சாதிக் கட்டுப்பாடு உள்ள உயர்ந்த எண்ணங்கள் கொண்ட கிராமத்து மக்கள் தான் இந்தக் கீழ்த்தரமான கொலையைச் செய்கின்றனர். பாவபுண்ணியத்திற்கு அஞ்சி வாழும் தாய்மார்களும், பெண்களும் இக்கொடூர செயலை ஆதரிப்பது ஏன் என்று தெரியவில்லை.

வரதட்சணைக் கொடுமையில் ஏற்படும் அவல மரணங்களையும் இதோடு சேர்த்துக்கொள்ளலாம்.

'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் பல காலமாக இந்து சமுதாயத்தில் பயபக்தியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இப்போது தடை செய்யப்பட்டு விட்டது. இதுவும் ஒரு கொடூரமான அநாகரிகமான கருணையற்ற சமுதாயக் கொலையாகும்.

சில ஆதிவாசிகள், காட்டில் வாழும் பழங்குடியினர், குணப்படுத்த முடியாத நோய் கண்டவர்களைக் காட்டில் கொண்டுவிட்டு வருகின்றனர் என்று மனிதவியல் நூல்கள் கூறுகின்றன.

ஆங்கிலேயேர்கள் தீராத அருவருக்கும் தொழு நோயாளிகளைத் தனியே ஒரு தீவில் கொண்டுவிடுவர் என்று சரித்திரம் கூறுகின்றது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் 'வாள்வடக்கிருப்பது' என்னும் உண்ணாநோன்பு,மௌன விரதம் என்று சில உயர்ந்த கொள்கைக்காக மரணம் எய்திய 'பிசிராந்தையார்' பற்றிய குறிப்பு நோக்கத்தக்கது.

இனி மனித இனம் படும் அல்லல்களை வைத்துக்கொண்டு இந்த கருணைக்கொலை பற்றி மறு பரிசீலனை செய்வோம்.

✦ உதாரணமாக ஒருவர் தீராத புற்றுநோயினால் பல ஆண்டுகள் அவதியுற்று அனைத்து மருத்துவ சிகிச்சைகளிலும் பலன் இல்லாமல் மருத்துவர்களும் கைகழுவி விட்டு வீட்டில் வைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள் என்ற நிலையில் நோயினால் தீராதவகையில் அவஸ்தைப்படும் நோயாளி.

✦ செலவு செய்து மருத்துவ வசதி அளிக்கமுடியவில்லை. நிதிப்பற்றாக்குறை.

✦ உடன் இருந்து உதவி செய்ய மனிதர்கள் யாருமில்லை...

✦ 'கோமா' என்னும் நினைவற்ற, படுத்த நிலையில் பல் லாண்டு காலம் உயிர்வாழ்ப வர்கள்.

✦ Brain death என்று கூறப்படும் மூளை மரணம் ஏற்பட்டு பலகாலம் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பவர்கள். மற்றும் நல்ல நிலையில் உள்ளவர்களும் கீழ்க்கண்ட அவஸ்தைகளுக்குள்ளாக நேரிடுகிறது.

✦ முதியோர் இல்லத்திற்குச் சென்று அநாதையாக மரணமடைய விரும்பாதவர்கள்.

✦ வயதான சுமங்கலியாக நல்ல நிலையில் இருக்கும் போதே யாருக்கும் தொந்தரவு அளிக்காமல் திடீர் மரணம் அடைய விரும்புபவர்கள்.

✦ ஏதோ ஒரு காரணத்திற்காக தற்கொலை செய்துகொள்ள விரும்புபவர்கள்.

✦ பலமுதியோர்கள், நாங்கள் நன்றாக வாழ்ந்துவிட்டோம். நோய் நொடியில்லாமல் மற்றவர் களுக்கு கஷ்டம் கொடுக்காமல் வாழ்க்கையை முடித்துக்கொள்ள விரும்புகின்றோம். எங்கள் கடமை முடிந்துவிட்டது. எல்லோரிடமும் அந்திம யாத்திரைக்கு அனுமதி உண்டா என்று எண்ணுபவர்கள் பலர் இன்று உள்ளனர்.

✦ உடல் ஊனமுற்று சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள்.

✦ வாழ்க்கையில் ஏதோ, ஒரு காரணத்தால் வெறுப்புற்று மன நோய் தாக்கி மீளாத் துயரத்தில் உள்ளவர்கள்.

✦ டாக்டர்களாலும், உறவினர்களாலும் கைவிடப்பட்டவர்கள்.

✦ சமுதாயத்தாலும், கடவுளாலும் சபிக்கப்பட்டவர்கள்.

✦ தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டு விகாரமடைந்து ஒதுக்கப் பட்டவர்கள், எயிட்ஸ், முற்றிய குஷ்டரோகி முதலியவர்கள்.

மேற்கூறிய நபர்கள் அகில உலகிலும் சுலபமாக மரணத்திற்கு உதவி கேட்கிறார்கள். தர்ம சாஸ்திரப்படி மனித நேயமுள்ள சமுதாயத்தில் இயற்கை மரணம் தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் சமீபத்தில் நெதர்லாந்து நாட்டில் அமுல்படுத்தியிருக்கும் கருணைக்கொலை சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது.

கருணைக்கொலை என்பது மனித சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை. ஆனால் விஞ்ஞான முன்னேற்றத்தின் தாக்கம் மனித சமூகத்தையும் மனித நேயத்தையும் எங்கோ படு குழிக்குத் தள்ளிக்கொண்டு போகிறது.

ஒரு நாட்டின் நாகரிகம் மற்ற நாடுகளை விரைவில் தாக்கும். உயர் கல்வி மூலமும் தொழில் நுட்ப முன்னேற்றத்திலும், சுற்றுலா முன்னேற்றத்திலும் உலகம் சுருங்கிவிட்டது.

மரண தண்டனை பல நாடுகளில் நீக்கப்பட்டுவிட்டது.

ஆண் பெண் உறவுமுறை மிகவும் சீர்கெட்டுவிட்டது. ஆறறிவு பெற்ற மனிதன் மிருகங்கள் போல் நடந்துகொள்கிறான்.

குழந்தை பெறுவதற்கு பல நவீன விஞ்ஞான உத்திகள் கையாளப்படுகின்றன. சோதனைக் குழாய்க் குழந்தைகள், விந்து விற்பனை, வாடகைத் தாய், அறுபது வயதுக்கு மேல் மகப் பேறு பெறுதல் இப்படி எத்தனையோ முயற்சிகள்...

குழந்தை பிறப்பை இஷ்டப்படி நாள் குறித்து அறுவைச் சிகிச்சை மூலம் எடுத்துவிடலாம். மரணத்தைத் தள்ளிப்போடலாம். குடும் பக் கட்டுப்பாடு.

வாழ்க்கையில் மரணம் ஒன்று தான் மனிதன் பயப்படக்கூடிய உண்மை. தெய்வம், மதம், கோயில், ஜாதி எல்லாம் இந்த உண்மைக்குப் பயந்து கட்டுப்பட்டு மனிதனைக் காப்பாற்றி வருகின்றது. உலகமே இந்தக் கட்டுப்பாட்டுக்குள் இயங்குகிறது.

ஒரு குறிப்பிட்ட வயது, அனுபவம் முடிந்தவுடன் உத்தியோக ஓய்வு, தன்னிச்சிசையான ஓய்வு இருப்பது போல் மக்கள் தன்னிச்சையான மரணம் சட்டபூர்வமாக கேட்க வாய்ப்பிருப்பது போல் தோன்றுகின்றது.

இந்தக் கருணைக் கொலையில் பல நன்மைகளும் உள்ளன. தமைகளும் உள்ளன. பிராணிகள் மருத்துவத்தில் ஒரு நோயைக் குணப்படுத்த முடியவில்லை என்றால் கருணைக் கொலை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பந்தயத்தில் ஓடும் குதிரைக்கு அடிபட்டு எலும்பு முறிந்துவிட்டால் உடனே சுட்டுக்கொன்றுவிடுவர். ஆனாலும் இப்போது மேனகா காந்தி அமைப்பில் பிராணிகளைக் கொல்ல அனுமதி அளிப்பதில்லை. இன்று ஜெயின் அமைப்புகள், பசு பாது காப்பகங்கள், நாய் காப்பகங்கள் அமைத்து பிராணிகள் இயற்கை மரணம் அடையும்வரை பாதுகாக்கின்றனர். மிருக வேட்டை தடை செய்யப்பட்டிருக்கின்றது.

வாழ்க்கையில் கஷ்டப்பட விரும்பாதவர்கள் மரணத்தை ஏற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்படுமா? 'மரண மருத்துவம்' என்னும் பிரிவு வர வாய்ப்புண்டா?

'மரண மருத்துவம்' மூலம் பொருளாதாரம் பாதிக்கப்படுமா? குடும்பக் கட்டுப்பாடு முறை/சாதனங்கள் மரண மருத்துவத்திற்கு வழிவிடவில்லையா? மருத்துவத் துறையே முதியோர்களையும், புற்றுநோய் போன்ற தீர்க்க முடியாத நோய்களையும் நம்பித்தான் அளவுக்கு மீறி செல்வம் கொளித்துக்கொண்டிருக்கிறது.

நோயாளிகளுக்கு மருத்துவ சுதந்திரம் கொடுத்து கருணைக் கொலை செய்ய அனுமதிக்கப்பட்டால் மருத்துவர்கள், மருத்துவ

டாக்டர்
G.பார்த்தசாரதி

மனை, மருத்துவத்துறைகள் பாதிக்கப்படுமா? அதனால் அரச செலவு குறையுமா? இதனை அனுமதிப்பார்களா? இதனால் சனத்தொகை குறைய வாய்ப்புண்டா? பொருளாதாரம் மேம்படுமா?

சில ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் திடீரென்று மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பொதுமக்களிடையே எந்தவிதமான எதிர்ப்பும் வரவில்லை! இடுகாட்டுக் குழிவெட்டும் பணியாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி மருத்துவர்களை வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டனர்! ஏனென்றால் டாக்டர்கள் பணிபுரிந்தால்தான் மரணம் ஏற்படும். இதனால் பயன் பெறுபவர்கள் (Under Takers) இடுகாட்டுப் பணியாளர்களே!- இது எனது கருத்தல்ல. பத்திரி கைக் குறிப்பு. □

யாழ்ப்பாணம்,

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக்கு மேலும் 1500 பேர் குலுக்கல் மூலம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி செலுத்தியவர்களில் மற்றுமோர் தொகுதியினருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த ஆயிரத்து 500 பேருக்குமான மீட்புநிதி மீளளிப்பானது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

மீளளிப்புச் செய்யப்படவுள்ளவர்களின் பெயர், விபரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு,

### வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/வ.கி/32 | திருமதி. மேரிறெயினா செலஸ்ரின் |
| யா/வ.கி/63 | ஏரம்பு கணேசபிள்ளை |
| யா/வ.கி/112 | திருமதி. மதுரமணி வேதிலிங்கம் |
| யா/வ.கி/116 | அடைக்கலம் எலவுஸ்த்திரியார் |
| யா/வ.கி/172 | திருமதி. மரியஜேறூட்தீபம் அன்ரனி -மரியராஜா |
| யா/வ.கி/221 | மரியாம்பிள்ளை றூபேட் மரியதாஸ் |
| யா/வ.கி/234 | திருமதி. மகேஸ்வரி பாலகுமாரசாமி |
| யா/வ.கி/246 | பவுலீனப்பு எஸ்தாக்கி |
| யா/வ.கி/265 | சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் |
| யா/வ.கி/395 | சண்முகம் கிருஸ்ணபிள்ளை |
| யா/வ.கி/428 | தேவசகாயம் பத்தலோமை |
| யா/வ.கி/481 | பொன்னம்பலம் தில்லைநடேசு |
| யா/வ.கி/509 | திருமதி. றீற்றா ற்றிமா அந்தோனிப் -பிள்ளை |
| யா/வ.கி/563 | மரியான் யாக்கோப்பு |
| யா/வ.கி/623 | கார்த்திகேசு முருகேசு |
| யா/வ.கி/653 | திருமதி. ஆனந்தலட்சுமி தவசீலன் |
| யா/வ.கி/775 | திருமதி. அண்ணமேரிபாக்கியம் ஜோஸ்ரின் -அப்பு |
| யா/வ.கி/788 | நாகலிங்கம் அருமைத்துரை |
| யா/வ.கி/829 | இளையான் சதாசிவம் |
| யா/வ.கி/899 | திருமதி. சறோஜினி யோகரட்ணம் |

### முல்லைத்தீவு மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| மு/42 | சின்னர் சின்னத்தம்பி |
| மு/83 | திருமதி. தவபாக்கியம் ஆனந்தராசா |
| மு/115 | முத்துத்தம்பி செல்வநாயகம் |
| மு/130 | சின்னக்குட்டி பொன்னம்பலம் |
| மு/137 | இராசையா செல்லத்துரை |
| மு/160 | செல்லையா தேவதாஸ் |
| மு/188 | திருமதி. சிவராணி பஞ்சாட்சரம் |
| மு/197 | கதிரவேலு சிவகுருநாதன் |
| மு/208 | கயிலாசபிள்ளை தம்பிராஜா |
| மு/297 | திருமதி. ஞானரஞ்சிதம் சிறில் |
| மு/306 | தங்கரத்தினம் தனராஜ் |
| மு/335 | கதிரவேலு பொன்னையா |
| மு/370 | திருமதி. கிருஸ்னாம்பாள் சுப்பிர -மணியம் |
| மு/413 | பூபாலபிள்ளை பொன்னம்பலம் |
| மு/484 | சண்முகம் செல்வானந்தம் |
| மு/532 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| மு/536 | திருமதி. இராசமணி கனகலிங்கம் |
| மு/563 | நாகலிங்கம் தியாகராசா |
| மு/577 | அன்னராசா அழகராசா |
| மு/641 | கனகசபை சிங்கரத்தினம், |
| மு/704 | திருமதி. தேவிகாராணி பாலசிங்கம் |
| மு/715 | திருமதி. பத்மாவதி கந்தையா |
| மு/722 | பாலசுந்தரம் கிரிதரன் |
| மு/740 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| மு/767 | பொன்னம்பலம் செல்வக்குமாரசாமி |
| மு/804 | சிதம்பரப்பிள்ளை கதிர்காமு |
| மு/877 | தம்பு நல்லதம்பி |
| மு/892 | முகமதுஅலி முத்து அருள்ராசா |
| மு/900 | பொன்னம்பலம் பேரின்பநாயகம் |
| மு/1053 | திருமதி. பரமேஸ்வரி தனபாலசிங்கம் |
| மு/1065 | திருமதி. சறோயினிதேவி கந்தசாமி |
| மு/1097 | வெற்றிவேலு மயில்வாகனம் |
| மு/1145 | சின்னத்துரை சுந்தரலிங்கம் |
| மு/1173 | திருமதி. ஜெயறஞ்சினி ஜீவகுமார் |
| மு/1220 | தம்பையா பரமானந்தம் |
| மு/1335 | மாப்பாணர் தங்கராசா |
| மு/1346 | திருமதி. தெய்வேந்திரராணி மனோகரன் |
| மு/1444 | கூழயன் நடராசா |
| மு/1467 | கணபதிப்பிள்ளை இராமலிங்கம் |
| மு/1526 | மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன் |

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| கி/ப/59 | தில்லையம்பலம் சிவகுருநாதன் |
| கி/ப/72 | கந்தையா பொன்னையா |
| கி/ப/91 | இராசையா இராசேஸ்வரன் |
| கி/ப/172 | திருமதி. யோகமலர் லோகநாதன் |
| கி/ப/178 | பொன்னையா தனபாலசிங்கம் |
| கி/ப/183 | திருமதி. சிவபாக்கியம் வேலாயுதம் |
| கி/ப/196 | திருமதி. மனோன்மணி கந்தசாமி |
| கி/ப/209 | சின்னத்தம்பி ஜெயக்குமார் |
| கி/ப/237 | விஜயகுமாரி கனகரட்னம் |
| கி/ப/296 | திருமதி. பூஞ்சோலை இராசேந்திரம் |
| கி/ப/313 | திருமதி. விமலாதேவி கணேச -லிங்கம் |
| கி/ப/321 | திருமதி. யோகேஸ்வரி யோகானந்தம் |
| கி/ப/345 | துரையப்பா தம்பிமுத்து |
| கி/ப/448 | திருமதி. மாக்கிறேற் சிங்கராசா |
| கி/ப/477 | திருமதி. திருமுகராகினி ஞானசேகரம் |
| கி/ப/556 | வினாசித்தம்பி மகாலிங்கம் |
| கி/ப/605 | வேலுப்பிள்ளை கந்தசாமி |
| கி/ப/629 | சரஸ்வதி கந்தையா |

### கிளிநொச்சி மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| வ/கி/43 | திருமதி. புஸ்பமலர் இராசேந்திர -லிங்கம் |
| வ/கி/84 | திருமதி. பூமணி தம்பிஐயா |
| வ/கி/188 | கந்தையா சர்வேஸ்வரன் |
| வ/கி/234 | திருமதி. துவாரகாதேவி வல்லிபுரம் |
| வ/கி/376 | சின்னத்தம்பி சரவணமுத்து |
| வ/கி/405 | தம்பிப்பிள்ளை தியாகராசா |
| வ/கி/426 | வல்லிபுரம் குலசேகரம்பிள்ளை |
| வ/கி/488 | செல்லப்பா சற்குருநாதன் |
| வ/கி/505 | செல்லையா பிரேமராஜா |
| வ/கி/515 | சபாபதி நடராசா |
| வ/கி/610 | விஸ்வநாதன் இராசசுந்தரம் |
| வ/கி/631 | தம்பிப்பிள்ளை உதயகுமார் |
| வ/கி/636 | கணபதிப்பிள்ளை ஆறுமுகம் |
| வ/கி/655 | திருமதி. சிரோன்மணி சின்னத்தம்பி |
| வ/கி/666 | திருமதி. யோகேஸ்வரி மகேந்திரன் |
| வ/கி/689 | சூசைப்பிள்ளை றெமீந்திரன் அமலன் -சேய் |
| வ/கி/695 | நாராயணபிள்ளை நவரத்தினம் |
| வ/கி/722 | சின்னையா சின்னத்தம்பி |
| வ/கி/757 | முருகேசு சுப்பிரமணியம் |
| வ/கி/789 | தம்பையா குகதாசன் |
| வ/கி/836 | திருமதி. இரத்தினம் சபாரஞ்சிதன் |
| வ/கி/852 | சேதுபதி ஜீவரத்தினம் |
| வ/கி/888 | கந்தையா நாகலிங்கம் |
| வ/கி/916 | பொன்னையா முருகுப்பிள்ளை |
| வ/கி/960 | நடராசா நகுலேஸ்வரன் |
| வ/கி/992 | தம்பிமுத்து ஞானேஸ்வரன் |
| வ/கி/1099 | திருமதி. புஸ்பராணி அம்பலவாணர் (அருளம்பலம்) |
| வ/கி/1191 | திருமதி. சந்திரமதி கணபதிப் -பிள்ளை |
| வ/கி/1222 | சிற்றம்பலம் சிவசுப்பிரமணியம் |
| வ/கி/1259 | இராசையா சிவராசா |
| வ/கி/1274 | இராமுப்பிள்ளை தேவராசா |
| வ/கி/1330 | கந்தசாமி சிவலோகநாதன் |
| வ/கி/1354 | முருகையா தனபாலன் |
| வ/கி/1360 | குப்புசாமி நாகராசா |
| வ/கி/1362 | செல்வரத்தினம் குமாரகுலம் |
| வ/கி/1529 | இராமநாதர் நாகேந்திரம் |
| வ/கி/1554 | இருளாண்டி இராசசந்திரன் |
| வ/கி/1572 | சிதம்பரப்பிள்ளை பூசைமாணிக்கம் |
| வ/கி/1695 | குமாரசாமி சிவசிதம்பரம் |
| வ/கி/1714 | தம்பையா அன்னலிங்கம் |
| வ/கி/1789 | கிருஷ்ணசாமி கிருஷ்ணகுமார் |
| வ/கி/1816 | கார்த்திகேசு பேரின்பவேலுப்பிள்ளை |
| வ/கி/1856 | தம்பிப்பிள்ளை சிவகுமாரன் |
| வ/கி/1862 | மாணிக்கம் சிவபாலன் |
| வ/கி/1875 | திருமதி. நாகரத்தினம் சோமசுந்தரம் |
| வ/கி/1949 | திருமதி. மகேஸ்வரி குமாரசாமி |
| வ/கி/2153 | சண்முகம் நாகலிங்கம் |
| வ/கி/2157 | முத்தர் சின்னத்தம்பி |
| வ/கி/2177 | வல்லிபுரம் கணேசு |
| வ/கி/2179 | சிவலிங்கம் செல்வரத்தினம் |
| வ/கி/2224 | பொன்னுத்துரை துரைசிங்கம் |
| வ/கி/2333 | கனகரெத்தினம் அமுதராசா |
| வ/கி/2381 | செல்லத்துரை சண்முகநாதன் |
| வ/கி/2407 | மரியாம்பிள்ளை அன்ரன் இராசநாதன் |
| வ/கி/2435 | சொக்கலிங்கம் கதிரேசு |
| வ/கி/2448 | வேலுப்பிள்ளை தெய்வவேற்பரம -நாதன் |
| வ/கி/2459 | மயில்வாகனம் சந்திரகுமார் |
| வ/கி/2572 | வேலுப்பிள்ளை முருகேசு |
| வ/கி/2604 | திருமதி. குலானந்தவதி நித்தியானந்த -ராசா |
| வ/கி/2643 | சுப்பிரமணியம் விஜயரத்தினம் |
| வ/கி/2659 | கணபதிப்பிள்ளை நித்தியானந்த -ராசா |
| வ/கி/2706 | செல்லர் இராசு |
| வ/கி/2716 | தோமாஸ் ஸ்ராலின் |
| வ/கி/2720 | திருமதி. பகவதிப்பிள்ளை திருநாவுக்கரசு |
| வ/கி/2737 | வல்லிபுரம் துரைராசா |
| வ/கி/2751 | மயில்வாகனம் தர்மலிங்கம் |
| வ/கி/2783 | கந்தையா சின்னத்துரை |
| வ/கி/2816 | பொன்னையா தேவராசா |
| வ/கி/2858 | மார்க்கண்டு குலத்துங்கம் |
| வ/கி/2878 | சின்னத்தம்பி தவராசா |
| வ/கி/2896 | ஞானப்பிரகாசம் சிவலிங்கம் |
| வ/கி/3013 | பொன்னையா முருகையா |
| வ/கி/3053 | சதாசிவம் அருட்பிரகாசம் |
| வ/கி/3057 | திருமதி. நாகேஸ்வரி அருணர்சலம் |
| வ/கி/3071 | பிலிப்புப்பிள்ளை மரியதாசன் |
| வ/கி/3080 | கணபதி இராசேந்திரம் |
| வ/கி/3110 | கணபதி செல்லத்துரை |
| வ/கி/3165 | சின்னத்தம்பி கிருஷ்ணதாசன் |
| வ/கி/3168 | சோமசுந்தரம் பாக்கியநாதன் |
| வ/கி/3205 | ஞானமுத்து அலன்றோஸ் |
| வ/கி/3303 | சதாசிவன் சற்குணநாதன் |
| வ/கி/3314 | ஆண்டி வேலும்மயிலும் |
| வ/கி/3372 | நாகலிங்கம் பேரம்பலம் |
| வ/கி/3421 | திருமதி. இரத்தினேஸ்வரி பால -கிருஸ்ணன் |
| வ/கி/3482 | வல்லிபுரம் தாமு |
| வ/கி/3556 | பொன்னையா ஜேசுரட்ணம் |

### வவுனியா மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| வ/வ/93 | சம்புநாதன் சீவரத்தினம் |
| வ/வ/135 | கணபதிப்பிள்ளை சின்னத்துரை |
| வ/வ/143 | திருமதி. புஸ்பராணி ஞானசேகரம் |
| வ/வ/144 | திருமதி. சரஸ்வதி மாணிக்கவாசகர் |
| வ/வ/166 | கிருஸ்ணன் மாயகிருஷ்ணன் |
| வ/வ/192 | சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் |
| வ/வ/208 | தில்லையம்பலம் சேனாதிராசா |
| வ/வ/243 | கந்தையா காசிநாதர் |
| வ/வ/345 | பொன்னுத்துரை தெய்வேந்திரன் |
| வ/வ/363 | கந்தையா கந்தசாமி |
| வ/வ/390 | கதிரேசு தருமலிங்கம் |
| வ/வ/395 | கதிரவேலு வினாசித்தம்பி |
| வ/வ/398 | நமசிவாயம் மங்களேஸ்வரன் |
| வ/வ/404 | நல்லையா தர்மபாலன் |
| வ/வ/408 | திருமதி. இந்திராணி வேகாவன -வேல் |
| வ/வ/445 | கனகசபை சிவசம்பு |
| வ/வ/547 | கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் |
| வ/வ/618 | சேனமுத்து பேரின்பகுமார் |
| வ/வ/639 | திருமதி. செல்லபாக்கியம் பிறை -சூடி |
| வ/வ/680 | அந்திரேஸ் சின்னத்துரை |

### மன்னார் மாவட்டம்

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| ம/18 | லோறன்ஸ் பரராசசிங்கம் |
| ம/233 | சந்தியோகு மரியநாயகம் பர்ணாந்து |
| ம/302 | இராமசேது பொன்னம்பலம் |
| ம/322 | அவுரார் மரியதாசன் |
| ம/345 | இலங்கநாதர் அருளானந்தம் |
| ம/399 | திருமதி. தவமணி கதிரவேலு |
| ம/422 | வீரகத்தி கமலேஸ்வரன் |
| ம/444 | பசுபதி சிவசுப்பிரமணியம் |
| ம/487 | சவிரி பீற்றர் |
| ம/517 | அமிர்தநாதன் தேவராசன் |
| ம/557 | அவுறாம்பிள்ளை செபஸ்தியான் -பிள்ளை |
| ம/579 | அலக்சான்டர் வின்சன்குருஸ் |
| ம/582 | மருசால் தானியேல் அரியரெட்ணம் |
| ம/650 | சுப்பன் மகேஸ்வரன் |
| ம/654 | பர்னாந்து சந்தியோகு |
| ம/713 | வயிரமுத்து ராசதுரை |
| ம/719 | சவேரியான் பீற்றர் |
| ம/758 | வரப்பிரகாசம் தேவதாசன் |
| ம/770 | கதிர்காமு பரதராசன் |

## இன்று ஒரு தகவல்

# எடைக்குறைப்பு

ஒருவர் சேமிப்புப் பழக்கத்தில் மிகுந்த கெட்டிக்காரர். பணத்தைச் சேமித்தார். புகழைச் சேமித்தார். பொருளைச் சேமித்தார். அதுவரைக்கும் சரி. அதேபோன்று உடலில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். உடல் மிகவும் பெருத்துப்போய் விட்டது! சேமிப்புப் பழக்கம் நல்லது தான்! அதற்காக இப்படியா?

உடல் மிகவும் பெருத்துக்கொண்டே சென்றால் அது உண்மையிலேயே கவனிக்க வேண்டிய விடயம். ஒருவரது உடல் அளவு சரியாக இருக்கின்றதா? பெருத்திருக்கின்றதா என்று மருத்துவரீதியாக எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்கென்று நீங்களே செய்து பார்க்கக் கூடியவாறு ஒரு கணக்குண்டு. இதற்கு கணிப்பான் எல்லாம் தேவையில்லை. உங்களது வயது, உயரம், எடை எல்லாவற்றையும் கூட்டுங்கள். இதில் எடை 10 சதவீதம் அதிகமாக இருந்தால் நீங்கள் குண்டு தான் சந்தேகமேயில்லை. சரி இதற்கு என்னகாரணம் என்று நினைக்கின்றீர்கள்? உணவுப்பழக்கம், இயந்திர வாழ்க்கை, போதுமான அளவு உடற்பயிற்சி, உடல் உழைப்பு இல்லாமல் இருப்பது போன்றவைதான்.

அப்பா, அம்மா பருமனாக இருந்தால் பிள்ளையும் பருமனாகப் பிறக்குமா? 100இல் 40 பேருக்குத்தான் இப்படி இருக்குமாம். அதேபோல் தாய், தந்தை இருவருமே ஒல்லியாக இருப்பார்களாம். அவர்களில் 10 சதவீதம் பேருக்குப் பிள்ளை பருமனாகப் பிறக்குமாம். அதனால் பாரம்பரியத்தை இதற்கு ஒரு முக்கியமான காரணமாகக் கூற முடியாது. குழந்தை கொழுகொழு வென்று என்று இருப்பதற்காக சில தாய்மார்கள் அடிக்கடி உணவு ஊட்டுவார்கள். ''நீ அழாமல் இருந்தால் சொக்லெட் தருவேன'' என்று பேரம்பேசுவது வேறு நடக்கும் .இப்படி செய்தால் இதுவே ஒரு பழக்கமாகிவிடும். அதை மாற்றுவது கஷ்டம்.

மருமகளுக்குப் பிரசவ நேரம் என்றால் அந்தப் பெண்ணை அசையாமல் ஒரு இடத்தில் அமர வைத்து, விதம் விதமாக சமைத்துப் போடும் மாமியார்கள் உள்ளனர். ஆச்சரியப்பட வேண்டாம்! அப்படியும் சிலர்உள்ளனர். இவையெல்லாம் நல்லதென்றா நினைக்கின்றீர்கள்? உடல் பெருத்து விடும். பிரசவத்திற்கும் முன்னும் பின்னும் எப்போதும்போல் வீட்டு வேலைகளை செய்யுங்கள். உடல் நிலை நன்றாக இருக்கும். தாய்ப்பால் கொடுக்காவிட்டாலும் தாய்க்கு எடை கூடும்.

சரி !பொதுவாக எடையைக் குறைக்க என்ன வழி? முதலில் திடீர் என்று ஒரே நாளில் அதைக்குறைக்க முயற்சி செய்யக் கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதை வழிக்குக் கொண்டு வரவேண்டும். உணவுக்கட்டுப்பாடு மிக முக்கியமானது. பழம், காய் கறிகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளலாம். கிழங்கு வகைகளை குறைக்கலாம். முக்கியமாக உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு கொழுப்புச் சத்து, மாச்சத்துக்களைக் குறைக்க வேண்டும்.

அரிசி ,வாழைப்பழம், கிழங்கு வகை, எண்ணெய், கேக், முந்திரிப்பருப்பு, கிறீம் போன்றவற்றையும் குறைத்துக்கொள்ள வேண்டும். நொறுக்குத்தீனி உண்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொது இலட்சியங்களுக்காக எத்தனையோ தியாகிகள் உண்ணாவிரதம் இருந்தனர். நீங்கள் உங்கள் சொந்த இலட்சியங்களுக்காகவாவது தியாகி ஆக முடியுமா என்று பாருங்கள்! வேறொன்றுமில்லை வாரத்தில் ஒருமுறை உண்ணாமல் இருக்கலாம். எல்லா மதமும் ஒவ்வொரு விதத்தில் உண்ணாவிரதத்தை வலியுறுத்துகின்றது. அதனால் மதம் சம்பிரதாயமாகக் கூட இதைக் கடைப்பிடிக்கலாம்.

எடைக்குறைப்பின் ஆரம்பத்தில் உடலில் உள்ள நீரின் அளவு குறைய ஆரம்பிக்கும். அதற்குப் பின் தான் உடல் எடை குறையும். அப்போதுநாம் உப்புச் சோக்கும் அளவைக் குறைக்க வேண்டும்.

சாப்பிடுவதிலும் சில நுணுக்கங்கள் உள்ளன. மெதுவாகச் சாப்பிடுவது!இப்படிச் செய்தால் மூளையிலுள்ள பசியுணர்வைத் தூண்டும் இடம் பசியைத்தூண்டாமல் மந்தப்படுத்தி விடும். அதிகமாக உண்பதற்கு முன்னரே பசி தணிந்து விடும். உணவை நன்றாக மென்று உண்ண வேண்டும். அடுத்தவர்களைப் பரிமாறச் சொல்லாமல் நீங்களே எடுத்துப் போட்டுச் சாப்பிடுங்கள். சாப்பிடும் போது முதலில் புரத வகையை உண்ணாது ஏனைய வற்றையே உண்ணவேண்டும்.

உடல் மெலிவதற்குச் சிலர் மருந்து உண்பார்கள். அவை பசியை உண்டாக்காது! இதனால் உடல் இளைக்கும். மருந்தை நிறுத்தியவுடன் மறுபடியும் பசி வந்துவிடும். அதனால் மருந்தை விட மனக்கட்டுப்பாடு தான முக்கியம்! உடல் எடையை குறைக்கச் சில அறுவைச் சிகிச்சைகளும் உள்ளன. இருந்தாலும்அந்த அளவிற்கு ஏன் போக வேண்டும்? உடற்பயிற்சி நீச்சல், வேகமாக நடப்பது, யோகாசனம் இவற்றில் எது உங்களுக்கு வசதியோ அதைச் செய்யுங் கள் போதும்.

உடலைக் குறைப்பதற்காக ஒருவர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தார். தொந்தியைக் குறைக்க என்ன வழி? என்று என்னைப்பார்த்துக் கேட்டார். நான் கூறினேன் ''தினமும் காலையில் முழங்காலை மடிக்காமல் குனிந்து உங்கள் காலின் பெருவிரலைத் தொடுங்கள் சரியாகி விடும்'' என்றேன். அதற்கு அவர் ''நான் குனிந்து கால் பெருவிரலைத் தொடுவதற்குத் தயாராகத்தான் உள்ளேன். ஆனால் எனது பெருவிரல் எங்கே உள்ளது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை அதுதான'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அவசியமேற்படின் படை முகாம் முன்பாகக்கூட புலிக்கொடி ஏற்றத் தயங்கக்கூடாது

## யாழ். பிரதேசப் பொறுப்பாளர் உரை

(கொழும்புத்துறை)

தேசியக் கொடிக்கு கொடுக்க வேண்டிய கௌரவம், மரியாதை அளப்பரியது. இந்த மரியாதையைக கொடுப்பதற்கு எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் தயங்கக் கூடாது. இதற்கு இடையூறு நேர்ந்தால் போராட்டங்களை நடத்த வேண்டும்.

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 75வது ஆண்டுவிழா, நிலையத் தலைவர் ஜெ.றெனிக்கல் தலைமையில் இடம்பெற்றபோது, நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின யாழ்ப்பாணப் பிரதேசப் பொறுப்பாளர் உமயகுமார் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், தேசியக்கொடி ஏற்றுவது போர்நிறுத்த மீறல அல்லவென்பதைக் கண் காணிப்புக் குழுவே ஒப்புக்கொண்டுள்ளது. இதை ஏற்றுவதற்கு எவரும் பயப்படத் தேவையில்லை.

தேவையானால் இராணுவ முகாமுக்கு முன்பாகக்கூட தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றத் தயங்கக் கூடாது. இதற்கு எந்த விதத்தில் தீங்கு வந்தாலும், துணிந்து போராட வேண்டும்.

தென்னிலங்கையில் 15 ஆயிரம் பேர் படைக்குச் சேர்க்கப்படுகின்றனர். இந்த ஆட்சேர்ப்பானது எமது பலம் அதிகரிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

நாம் பலமாய் இருந்தால் மட்டுமே சமாதானம் மலரும் என்ற புரட்சிகர சிந்தனையை ஒவ்வொரு தமிழ்மகனும் கொண்டிருக்கவேண்டும் என்றார்.

(உ-51)

# சட்டவிரோத ஆயுதப் பயிற்சியில் முஸ்லிம்கள் ஈடுபடுகின்றனர்

## உள்துறை அமைச்சகம் ஊர்ஜிதம்

(கொழும்பு)

முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் சில சட்டவிரோதமான முறையில் ஆயுதப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றமையை உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைட் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போதைய பதட்ட சூழ்நிலையில் இது பற்றிய விபரங்களை வெளியிட முடியாது என்றும் எனினும் இந்தக் காரணத்தினாலேயே கிழக்கு மாகாண நிலை குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு உயர் மட்ட குற்றப் புலனாய்வு விசாரணைக்குழுக்கள் தம்மால் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கரையோர நகரான காத்தான்குடி மற்றும் முக்கிய முஸ்லிம் நகர்களை அண்டிய பகுதியில் மேற்படி குழு பல்வேறு ஆயுதங்களையும் இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகவும்,

இக்குழுக்கள் முகாஜ், அல் கொய்டா, ஒஸாமா, ஜிசாத் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வருவதாகவும் அப்பிரதேச மக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்தவாரம் பாராளுமன்றக்குழு அறையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி திருமதி பேரியல் அஷ்ரப் உரையாற்றுகையில்,

கிழக்கில் முஸ்லிம் மக்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்க அரசு தவறினால் எமது முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதம் ஏந்திப் போராடத் தயாராகவே உள்ளனர். இதனை தவிர்க்க முடியாது.

அத்துடன், எமது இளைஞர்களும் புலிகள் இயக்கத்துடனும் ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து போர்ப் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள் எனக் கூறியிருப்பதுடன், அப்படியானதொரு சூழ்நிலை வந்துவிடக்கூடாது என்று தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இராசி பலன்

**28. 08. 2003**
**(ஆவணி -11, வியாழன்)**
பிரதமை- மு. இ.11.35வரை
மகம் -காலை 06.08 வரை
பூரம் வைகறை- 5.33 வரை
இராகுகாலம் - 1.35-03.05
சுபநேரம் - 07.35-09.05
அமிர்த சித்தம்

**மேடம்**
ஆரோக்கியக்குறைவு, காரிய தாமதம், தொழில் நன்மை, மனச்சோர்வு.

**இடபம்**
எடுத்த காரியம்தாமதம், வீண் பயம், மாதா சுகம், போசன சுகம்.

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம்நிறைவேறும், சத்துருஜெயம், பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு.

**கடகம்**
விவாதம், காரிய சாதனை, வஞ்சகம், தனவிரயம்.

**சிங்கம்**
ஆழ்ந்தசிந்தனை, ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம்.

**கன்னி**
மனக்கிலேசம், நண்பர்கள் விரோதம், முயற்சி தாமதம், பிரயாணம்.

**துலாம்**
மேன்மை, நல்லமனைவாசம், குதூகலம், காரிய சித்தி.

**விருச்சிகம்**
தொழில் நன்மை, புதிய திட்டமிடல், முயற்சி பலிதம், அதிகாரம்.

**தனுசு**
பித்தரோகம், குடும்பசுகம், காரிய தாமதம், பிரயாணம்.

**மகரம்**
பெரியோர் வெறுப்பு, தர்மம, வாகன பயம், முயற்சி தடங்கல்.

**கும்பம்**
மனச்சோர்வு, காரியசித்தி, புதிய பொருள் சேர்க்கை, உடல் நலக்குறைவு.

**மீனம்**
மனமகிழ்ச்சி, தேகாரோக்கியம், செய்தொழில் விருத்தி ,முயற்சி பலிதம்.
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

யாழ்.குடாநாட்டில் பணியாற்றும்

# 32 கிராம அலுவலர்கள் தரம்-Iற்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 32 கிராம அலுவலர்கள் தரம்-1 கிராம அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு,

**வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்:-**

பூ.சிவபாதசுந்தரம், அ.தனபாலரத்தினம், இ.துரைராசா, தி.நித்தியானந்தன், இ.இராஜமோகன்.

**வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவு:-**

நா.குமரகுருநாதன், க.சிறீகரன், க.விஜயவேள்.

**வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு:-** செ.வைத்தியநாதன், ச.சாந்தநாயகம், சி.சக்திகிரீவன்.

**வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு:-**

த.கணேசதாஸ்.

**வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு:-** க.சண்முகவடிவேல்

**தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு:-**

க.நடராஜமூர்த்தி, ந.இராஜகுமாரன், பொ.லோகேந்திரன்

**வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு:-** சி.யோகநாதன், ச.நாகதீபசோதிரூபன்,

**வடமராட்சி தெற்கு, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு:-**

சி.குணராசா, த.சுந்தரபாரதி, க.ஆனந்தராசா, சி.பிரபாகரன், க.[illegible]னேந்திரன்,

**வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

த. தர்மகுலசிங்கம், வி.நடராசா,

**ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-** வை.குருமூர்த்தி,

**காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு:-**

க.கனகசபாபதி, தி.ஸ்ரீஸ்கந்தராசா,

**வேலணை பரதேச செயலர் பிரிவு:-** கு. அம்பிகைபாகன், சி.ரவீந்திரதாஸ,

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு:-** செ.சச்சிதானந்தன, கு.சாந்தமோகன்,

இதேவேளை, மேற்குறிப்பிட்ட 32கிராம அலுவலர்களுடைய தனிநபர் சேவைகளை தமக்கு அனுப்பி வைக்கும்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க சகல பிரதேச செயலர்களையும் கேட்டுள்ளார்.

சேவைமுப்பு அடிப்படையில் இவ்வாண்டு முற்பகுதியில்186 கிராம அலுவலர்கள் தரம் உயர்த்தபபட்டமை இங்கு குறிப்பிடததக்கது.

(உ-10)

# குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிஸார் மீது நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில், சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

பொது மக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பிராந்தியத்தின் பொலிஸ் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சபுகஸ்கந்த பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் இருவர் யுவதி ஒருவரை மயானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்று, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை தொடர்பாக பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே பொலிஸ்மா அதிபர் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

(தி)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி
–குறள்–

# வலம்புரி

## எச்சரிக்கை வேண்டும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது கலாசாரப் பிறழ்வுகள் மிக மோசமாக மலிந்து விட்டது. யுத்த காலத்தில் கூட இறுக்கமாகப் பேணப்பட்ட கலாசார விழுமியங்கள் சமாதானச் சூழ்நிலையில் சீரழிந்து வருகின்றமை மிக ஆபத்தானதோர் அறிகுறியாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினர். தரை வழிப் பாதைக்குத் தடை விதிக்கப்பட்டதனால் கடல், ஆகாய மார்க்கமாகவே தமது பயணங்களை மேற்கொண்டனர். எனினும் தேவையான நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பயணத்தில் கூட செல்வாக்கு மேலோங்கியிருந்தமை குடாநாட்டு மக்களின் வாழ்வியல் கோலங்கள் எவ்வாறு இருந்ததென்பதை ஊகித்துக் கொள்வதற்கான ஓர் குறிகாட்டியாகும்.

இந்நிலையில் அரசும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனாக ஏ-9 யாழ். கண்டி வீதி போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டது. இப்பாதை திறக்கப்படுவதை யாழ்ப்பாண மக்கள் பெரும் பேறாகக் கருதினர். கடல் மற்றும் விமானப் போக்குவரத்தினால்பட்ட துன்ப, துயரங்கள் ஏ-9 பாதை திறக்கப்படுவதோடு நின்றுபோகும் என எதிர்பார்த்தமையே பாதை திறப்பைப் பெரும் பேறாகக் கருதுவதற்குக் காரணமாகும்.

அவர்கள் எதிர்பார்த்தது போல் ஏ-9 பாதை திறக்கப்பட்டதனால், வெளிமாவட்டங்களுக்கான பயணம் சுலபமாக இருந்ததெனினும், அதற்கு மேலாக யாருமே எண்ணிப் பார்க்காத வகையில் சமூகச் சீரழிவுகளும் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்குள் வந்து சேர்ந்து விட்டது.

அரைக்காற்சட்டைக் கலாசாரம் முதல், திறந்த வெளிகளில் கூடியிருந்து குடித்துக் கும்மாளம் போடும் கலாசாரம் வரை யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவிவிட்டது. குறிப்பாகத் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் ஆடை அலங்காரங்களும், அவர்களின் நடத்தைகளும் யாழ்ப்பாணக் கலாசாரத்தில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இளம் சமூகம் கலாசாரப் பிறழ்வுகளுக்குட்பட்டு தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களையே அழித்து விடுகின்றனர்.

எனவே, இது விடயத்தில் பெற்றோர்களும், பொது அமைப்புகளும் மிகுந்த விழிப்பாக இருப்பதுடன் கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தும் நோக்குடன் தென்னிலங்கையில் இருந்து வருபவர்களை இனங்கண்டு கொள்வதும். அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் காலத்தின் கட்டாய தேவையாகும்.

---

### தரமற்ற அரிசி விநியோகத்தைக் கண்

# புனர்வாழ்வு அமைச்சருக்கு எதிராக

# வடமராட்சி மீனவர்கள் வழக்குத் தாக்கல்

(திருநெல்வேலி)

நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி தரமற்றதாக இருப்பதுடன் கூடிய விலையில் வழங்கப்படுவதாகவும், வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசத் தலைவர் கே.சூரியகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

மீனவர் நிவாரணத்திற்கு வழங்கும் அரிசியில் புழுக்களும் வண்டுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. அத்துடன், ஒரு கிலோ அரிசி 31ரூபா 34 சதமாக விலையிடப்பட்டுள்ளது. ஆனால் சமுர்த்தி மற்றும் இடம்பெயர்வு நிவாரணத்திற்கென வழங்கப்படும் அரிசி 28ரூபா 50 சதம் என விலையிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் காசுக்கு விற்பனை செய்யப்படும் அரிசி 25 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதுடன் தரமானதாகவும் இருக்கின்றது. ஆனால் நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசியின் விலை அதிகமாக இருப்பதுடன் தரமற்றதாகவும் உள்ளது. இதன் வேறுபாட்டிலுள்ள மர்மம் என்ன? இது புனர்வாழ்வு அமைச்சர் தனது சட்டைப்பையை நிரப்பும் நடவடிக்கையாக உள்ளதா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி மற்றும் காசுக்கு விற்பனை செய்யப்படும் அரிசிமாதிரிகள் பொதிசெய்து புனர்வாழ்வு அமைச்சரிடம் விளக்கம் கேட்டு அனுப்பி வைக்கவுள்ளதாகவும், அதற்கு தகுந்த பதில் தராவிடின் நீதிமன்றத்தில் மக்கள் சார்பாக புனர்வாழ்வு அமைச்சருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் சூரியகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-5,43)

---

# வடககு கிழககுப் பிரிபபுககு புளொட், ஈ.பி.டி.பி.எதிர்ப்பு

### ஜனாதிபதியிடம் வெளிப்படையாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் நேற்று முந்தினம் அவரது மாளிகையில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

வடக்குக் கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்துக்கு இவ்விரு கட்சித் தலைவர்களும் தமது கடுமையான எதிர்ப்பினை இச் சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் குறித்தும் இவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, டி. பி. விஜயதுங்கா மற்றும் தற்போதைய சந்திரிகா கூட வடக்கு கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டபோது எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று இச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(தி)

---

# வட–கிழக்கு பிரிப்புக்கு

## ஆதரவாக சிங்கள-முஸ்லிம் மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று அம்பாறை நகரப் பகுதியில் கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி என்பன இடம்பெற்றன. ஜனாதிபதியின் யோசனைப்படி வடக்கு கிழக்கு மாகாணத்தை பிரிக்க வேண்டும். இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்க வேண்டாம் போன்ற கோரிக்கைகளை முன்வத்தே இவ்வார்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு பிறவுண் றோட் சந்தியில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை நடத்தப்பட்ட இப்பேரணியில், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், நூற்றுக்கணக்கான சிங்கள முஸ்லிம் பொதுமக்களும் கலந்து கொண்டதாக, தெரிவிக்கப்படுகிறது.

(தி)

---

# பல்கலை ஊழியர் போராட்டத்திற்கு ஆதரவுக் குரல்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வகையில் அவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு மனித நேய அமைப்புக்கள், வங்கி ஊழியர் சங்கம் மற்றும் தமிழராசிரியர் சங்கம் ஆகியன இணைந்து ஆதரவுக்குரல் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி. தங்கராஜா மற்றும் உறுப்பினர்களை யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து பி.ப 1 மணியளவில் சந்தித்த மனித நேய ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன், வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதி எஸ். சிவபாலன், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் அதன் மாவட்டச் செயலாளர் குமாரசாமி ஆகியோர் இதற்கான உறுதி மொழியினை வழங்கினர்.

கடந்த 16 நாட்களாக நடைபெற்றுவரும் பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நியாயமானது என்பதுடன் இந்த நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்படும் போது அவற்றைப் பார்த்திருக்கமுடியாது.

யாழ். மாவட்டத்தில் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதும், யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தம் பற்றி எந்த விதமான கவனமும் செலுத்தாது இருந்து வருகின்றமை கவலைக்குரிய விடயம் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சருக்கும் இது விடயமாக அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபடப் போவதாகவும் இது தொடர்பில் கண்டன அறிக்கைகளை வெளியிடப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இப் போராட்டம் சம்பந்தமாக எந்த வித கவனமும் செலுத்தாது இருக்க, கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் பிரதிநிதிகள் அண்மையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் நிலைப்பாடுகள் தொடர்பாக நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றமையையும் சுட்டிக்காட்டினர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் ஒன்றிணைந்து வெகுஜனப் போராட்டங்களில் குதிக்க முயன்றால், அதற்கு தாமும் ஆதரவு தெரிவித்துச் செயற்படவுள்ளதாகவும் உறுதியளிக்கப்பட்டதுடன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ், பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் சம்பந்தமாக விடுத்த பத்திரிகை அறிக்கைகளைப் போல் 3ம் நிலைக் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கும் அறிக்கைகளை விடுத்து ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

(உ-4)

---

### அரசு-புலிகளிடையே அடுத்த மாதம் நடைபெறும்

## பேச்சுக்கான ஆயத்தங்களைக் கவனிக்க

# தாய்லாந்துத் தூதுவர் தாய்நாடு பறந்தார்

(கொழும்பு)

அரசிற்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தில் தாய்லாந்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அந்நாட்டு இலங்கைக்கான தூதுவர் ஜேலாம் ரிலியன்நெட் கடந்த ஞாயிறன்று அவசரமாக தாய்லாந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வசதிகளை தாய்லாந்தில் செய்து தருமாறு அண்மையில் வன்னி சென்றிருந்த தாய்லாந்து தூதுவரிடம் விடுதலைப் புலிகள் கேட்டிருந்ததாகவும் அதேபோன்று அரசும் பேச்சுவார்த்தையை தாய்லாந்தில் ஆரம்பிக்க வேண்டுமென அந்நாட்டு பிரதமரிடம் தூதுவர் ஜேலாம் ரிலியன் நெட்டிடமும் கோரியிருப்பதாகவும் கூறப்படுகிறது.


இதனையடுத்தே தாய்லாந்துத் தூதுவர் சமாதானப் பேச்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யும் பொருட்டு அவசர அவசரமாக நாடு திரும்பியுள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்து தூதுவரின் இத்திடீர் பயணம் குறித்து தூதரக வட்டாரங்கள் தகவல் எதுவும் வெளியிடவில்லை.

இருப்பினும் ,கடந்த 16ஆம் திகதி வன்னி சென்றிருந்த தாய்லாலந்துத் தூதுவர் இம்மாத இறுதியில் மீண்டும் வன்னி செல்வார் என தூதரக வட்டாரங்கள் முன்னர் தகவல் வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-10)

---



## சாயி அருளமுதம்

நாமத்தின் இனிமையை கற்கும்படி மக்களைத் தூண்டுவது எனது பொதுவான வழக்கமாகும் நான் உபந்நியாசங்களை ஒரு ஆன்மீகப்பாட்டுடன் ஆரம்பித்து, நாமாவளிகளுடன் அவற்றை முடிக்கின்றேன். இவற்றின் இடையிலேயே நான் கூறவிரும்பும் பாடத்தை எடுத்துச் சொல்கிறேன். அது ஒரு ருசியான ஆரோக்கியமான உணவை ஒரு தட்டில்வைத்து நாமாவளி எனும் மூடியினால் மூடுவதற்கு ஒப்பாகும். அவ்வாறே அதை நீங்கள் வைத்துக் கொள்ளலாம்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

---

# மடு வீதியைத் திறக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு

(மன்னார்)

மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்ட மடு வீதியைத் திறந்து விடுவதற்கேற்ற நடவடிக்கையை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி பாதை திறந்து விடப்பட்டால் கடந்த ஒருவருட காலமாக மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வறிய கிராமிய மக்கள் தங்கள் விவசாய உற்பத்திகளை கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக கொண்டு சென்று விற்பனை செய்து விட்டு அங்கிருந்து தேவையான பொருட்களைப் பெற்றுக்கொண்டு தங்களது கிராமங்களுக்கு உடன் திரும்பக்கூடிய நிலை உருவாகி இருந்தது.

இது வறுமைகாரணமாக அல்லலுற்ற ஏழை கிராமிய மக்கள் தங்கள் நிலையை உயர்த்த வழிகோலியது. ஆனால் தற்போது இப்பாதை மக்களுக்கு மூடப்பட்ட நிலையில், விவசாய உற்பத்திகளை இம்மக்கள் நெடுந்தூரம் மேடு,பள்ளம் நிறைந்த புழுதிபடிந்த பாதையூடாக எடுத்துச் சென்று உயிலங்குளம் வழியாக கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளதால்; பல ஏழை மக்களது முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது என்பது பிரதமரதும், பாதுகாப்பு அமைச்சரதும் கவனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் கொண்டு வரப்பட்டதையடுத்து இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சிறிபால சுகண்டுகொட தனது 07.08.2003 திகதிய கடிதம் மூலம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இதுவிடயத்தைத் தெரிவித்துள்ளார்.

(உ)

### செம்மணியில் புதையுண்டவர்களின்

# நெருங்கிய உறவினர்களது இரத்தமாதிரி பிரிட்டனுக்கு

(கொழும்பு)

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் படுகொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்களின் நெருங்கிய உறவினர்களது இரத்தப் பரிசோதனைகளை பிரிட்டனில் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய, சில உறவினர்களின் இரத்த மாதிரிகள் பிரிட்டன் ஜோக் வெயர் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான முடிவுகள் இன்னும் இரு மாதங்களில் கிடைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி விசாரணை இறுதிக் கட்ட நடவடிக்கைகளின் போது தீர்மானங்களை மேற்கொள்வதில் இரத்தப் பரிசோதனை அறிக்கைகள் முக்கிய பங்கினை வகிக்கும் என நம்பப்படுகிறது. (தி)

# அமெரிக்காவில் ஆயுதக் கொள்வனவு இதுவே இலங்கைக்கு இலாபகரமானது

## பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இஸ்ரேலிடம் இருந்து ஆயுதக் கொள்வனவை மேற்கொள்வதை விட அமெரிக்காவில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது இலங்கைக்கு இலாபகரமானதாகும் என்ற காணி அமைச்சர் ராஜித சேனாரத்னாவின் கருத்துக் குறித்து ஆராய்ந்த பாதுகாப்பு அமைச்சு, இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை இரத்துச் செய்வது என்றும், ஆயுதக் கொள்வனவிற்கு புதிய கேள்விப் பத்திரங்களை கோருவது என்றும் முடிவு செய்துள்ளது.

கடந்த திங்களன்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் பிரதமரின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் காணி அமைச்சர் ராஜித சேனாரத்னா ஆகியோர் கலந்து கொண்டு நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

இதன் போது இஸ்ரேலிடம் இருந்து ஆயுதக் கொள்வனவு மேற்கொள்வதற்கு எதிராக அமைச்சர் ராஜித சேனாரத்னா-கருத்து வெளியிட்டார்.

இஸ்ரேலிடம் ஆயுதக் கொள்வனவு செய்வதை விட அமெரிக்காவில் கொள்வனவு செய்வது இலாபகரமானது என்பதையும் அங்கு சுட்டிக் காட்டினார்.

இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சு இது பற்றி கூடி ஆராய்ந்து மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

# மண்சரிவில் புதையுண்டு நால்வர் மரணம்

(கொழும்பு)

தலங்கம-கந்தகுவத்த மலைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்சரிவில் நால்வர் புதையுண்டு உயிரிழந்துள்ளனர்.

40அடி உயரமான மேற்படி மலைப் பகுதிக்கு அருகாமையில் இருந்தவர்களான மேற்படி நான்கு நபர்களும் சுவரொன்று கட்டுவதற்காக அத்திவாரம் இடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயமே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

இதே வேளை மேற்படி நால்வரின் சடலமும் பொலிஸாரினால் மீட்கப்பட்டு விட்டதாக அப்பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## 7 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மனுத்தாக்கல்

(கொழும்பு)

போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சித்திரவதை செய்த அதிரடிப் படை பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 7பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்று கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலநறுவை வாசி ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட இம் மனுவில் வடமத்திய மாகாணத்தில் ஊழல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பிரிவினர், சட்ட விரோதமான முறையில் மதுபானம் வைத்திருந்ததாக கூறி, என்னை சித்திரவதை செய்துள்ளனர்.

இது மனித உரிமை மீறும் செயலாகும் எனவும் தனக்கு 8லட்சம் ரூபா நஷ்ட ஈடாக பெற்றுத் தருமாறும் குறிப்பட்டுள்ளார் (தி)

# 63 வயது வயோதிபர் சிறுமி மீது பலாத்காரம்

(யாழ்ப்பாணம்)

63 வயது வயோதிபர் ஒருவர் 13 வயது சிறுமி ஒருத்தியைக் பாலியல் வல்லுறவு முயற்சிக்கு உட்படுத்தியுள்ளார்.

வடமராட்சி குடத்தனையில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது

சிறுமியின் பெற்றோர் குடத்தனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிற்கு சென்றிருந்தனர். இதனால் பிரஸ்தாபச் சிறுமி வீட்டில் தனியே இருக்க நேரிட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்திலேயே பிரஸ்தாப வயோதிபர் சிறுமியை பாலியல் வல்லுறவு முயற்சிக்கு உட்படுத்தியதாகக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று மந்திகை மருத்துவ மனையில் வைத்திய பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். (த)

# கொழும்பில் பொலிஸ்பதிவு நடைமுறையில் இல்லை

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நானோ அல்லது பொலிஸ்மா அதிபரோ பொலிஸ் நிலையங்களுக்கு இதுவரை பணிப்புரை எதையும் விடுக்கவில்லை என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக வெளியான செய்தி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே உள்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எந்தவொரு பொலிஸ் நிலையத்திலாயினும் இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டால், அவ்விடயம் குறித்து தமக்கு முறையிடலாம் என்றும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். இதேவேளை மக்களின் விபரங்களை சேகரிக்கும் நோக்குடன் பொலிஸாரால் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்களை சிலர் தவறான அர்த்தம் கொண்டுள்ளனர்எனவும் சுட்டிக்காட்டினார். (தி)

# விண்வெளியில் அற்புத நிகழ்வு

(கொழும்பு)

அறுபதினாயிரம் வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் அற்புத நிகழ்வு விண்வெளியில் நடைபெறுகின்றது. நேற்று பி.ப 3.52 மணி தொடக்கம் 29ஆம் திகதி வரை செவ்வாய் கோள் பூமிக்கு மிகவும் அருகாகப் பயணம் செய்வதாக வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இன்னும் ஒரு தடவை இந்த நிகழ்வு நடப்பதற்கு 60,000 வருடங்கள் செல்லும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்கிரகம் ஆறு மடங்குகள் பெரிதாகக் காட்சி தரும் என்றும், அதன் வழமையான பிரகாசத்திலும் 85 மடங்கு அதிக பிரகாசத்தை வெளிப்படுத்தும் என்றும், கிழக்கு வானில் இதனை வெற்றுக் கண்களால் பார்வையிடலாம் என்றும் கொழும்பு பல்கலைக் கழக பௌதீகவியல் விரிவுரையாளர் டாக்டர் சந்தன ஜயரத்ன தெரிவிக்கின்றார். அடிவானத்தில் சூரியன் மறைந்ததும், மிகவும் பிரகாசமான செந்நிறப்புள்ளியை அவதானிக்கலாம். தொலைநோக்கு கருவி மூலம் பார்ப்பது சுலபம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### குடும்பப் பெண்...

சிப்பாய் தனிமையில் இருந்த அப் பெண்ணிடம் பாலியல் சேட்டை புரியமுற்பட்டுள்ளார். இதனால் அச்சமடைந்த அப்பெண் கூக்குரல் இடவே அச் சிப்பாய் தப்பியோடிவிட்டார். கூக்குரலை கேட்டு அப் பகுதிக்குச் சென்ற மக்கள் தேடுதல் நடத்தியபோதும் அச் சிப்பாயைப் பிடிக்க முடியவில்லை.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பாக சம்பவம் நடைபெற்ற வீட்டுக்கருகில் இருக்கும் இராணுவத்தினர் பிரஸ்தாபப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசாரணைகளில் சம்பந்தப்பட்ட பெண்ணினால் பிரஸ்தாபச் சிப்பாய் அடையாளம் காட்டப்பட்டார். அத்துடன் பிரஸ்தாபச் சிப்பாயின் காலடி அடையாளத்தை கடகத்தினால் மூடிவைத்து பிரஸ்தாபப் பெண் உறுதிப்படுத்தியதைக் கண்டு விசாரணைகளை மேற் கொள்ளச் சென்ற பொலிஸார் அதிர்ச்சி உற்றதாகத் தெரியவருகிறது.

பிரஸ்தாபச் சிப்பாயுடன் அன்றைய தினம் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த ஏனைய இரண்டு சிப்பாய்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ.த-5.43)

### கிழக்கில்...

வரும் 8-ந் திகதி மீண்டும் சந்தித்துப் பேசுவதெனவும் பிரதமர் அங்கு தெரிவித்தார்.

இச் சந்திப்பில் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாணடோ, உளதுறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், கே.சிவாஜிலிங்கம், ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜோசப் பரராசசிங்கம், தங்கவடிவேல், துரைரட்ணசிங்கம் ஆகியோரும்,

முஸ்லிம்கள் தரப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேவுதாவுத் உட்பட வடக்குக் கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### சமாதான...

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச் செய்தி தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தோ அல்லது நேர்வே அரசு தரப்பிலிருந்தோ உத்தியோக பூர்வமான தகவல் எதுவும் இது வரை வெளியிடப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# அமைச்சர்கள் ராஜித - ரவி இருவரையும் கொலை செய்ய சதி

## குற்றப் புலனாய்வு திணைக்களம் தகவல்

(கொழும்பு)

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க ஆகிய இருவரையும் கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

மேற்படி அமைச்சர்கள் இருவரையும் கொலை செய்வதறகு திட்டமிடப்பட்டுள்ளதாக தமக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்திருப்பதாக குற்றப்புலனாயவுத் திணைக்களம் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுடன் இருவரையும் கொலை செய்வதற்கு தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் முயற்சி மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் பிரஸ்தாப நபரை நீதிமன்றத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (இ)

### தமிழ்க்குழு...

மேற்படி இருஇளைஞர்களும் காணாமற் போன சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் இரு சந்தேக நபர்களின் வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட இளைஞர் கைது செய்யப்படவுள்ளதாகவும் அவர் தமிழ்க் குழுவொன்றின் முன்னாள் உறுப்பினர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-5)

### வவுனியாவில்...

காணிப்புக் குழு அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வு எந்த விதத்திலும் எவரையும் பாதிக்காது எனவும் தமிழரின் உரிமை கலாசாரம் என்பவற்றை வெளிக்காட்டும் நோக்கிலேயே இந் நிகழ்வு இடம் பெறவுள்ளது எனவும் இதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லையெனவும் அவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அடுத்த வாரமளவில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் பொங்கு தமிழ் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளது. (இ-5,13)

# பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பும் ஆண்களிடம் இருந்து கோர்ரப்படுகின்றது.

★அராலி
★வட்டுக்கோட்டை
★சுழிபுரம்
★சங்கானை
★மூளாய்
★சித்தன்கேணி
★பண்டைத்தரிப்பு
★மாதகல்
★இளவாலை

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை;

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு இம் மாதம் 30-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்புரி — ஆளணி முகாமையாளர்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



ஓட்டுமடம் யாழ்.ப.நோ.கூ.ச.கிளை இல.04 இன் செயலாளர் திரு.மு.பொன்னுத்துரை அவர்களின் அன்புத் தந்தையாரான;

**அமரர்**
**கந்தையா முத்து**

அவர்கள் 29.07.2003இல் சிவபதமடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

(C-6588) ஓட்டுமடம் ப.நோ.கூ.சங்கம் கிளை 04

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்
V.S.P ஸ்ஞ் ஓயில்
தயாரிப்பாளர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.